தொங்கள் : பதின்நான்கு

Registered as 

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

ர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 15 புதன்கிழமை (01.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 308


# அரச ஏற்பாட்டில் வன்னிக்கு வாகனத் தொடரணியில் உணவு!

## ரிரு நாள்களில் 60 லொறிகளில்; பின்னர் 100 லொறிகளில் அனுப்புவதற்கு ஜனாதிபதி செயலகக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஒக்ரோபர் 01

அத்தியாவசிய உணவுப் பொருள்களேனும் இல்லாமல் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ள வன்னிமக்களுக்கு, அரசாங்கம் இன்னும் ஓரிரு நாள்களில் 60 லொறி களில் உணவுப் பொருள்களை வாகனத் தொடரணியில் எடுத்துச்செல்லவுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் பசில்ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பிரஸ்தாப மாநாட்டில் கலந்துகொண்ட மீள்குடியேற்ற றும் அனர்த்த நிவாரண அமைச்சர் ரிஷாட் பதியுதீன் து பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். அதன்பிரகாரம் களின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்க ளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இன்னும் ஓரிரு நாள்க ளில் முதலில் 60 லொறிகள் புறப்படும். அதனைத் தொடர்ந்து மேலும் 100 லொறிகளில் (14ஆம் பக்கம் பார்க்க)

## உணவு வாகனத் தொடர் அணியில் செல்லவிருந்த லொறி ஒன்றுக்குள் சக்திவாய்ந்த வெடிபொருள்

### கண்டுபிடித்ததாக பாதுகாப்பு அமைச்சு சொல்கிறது

வவுனியா, ஒக். 01

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள கதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல் விருந்த லொறிகளில் ஒன்றுக்குள் இருந்து 2.5 கிலோ டையுள்ள அதிசக்திவாய்ந்த வெடிபொருள்கள் நேற்றுப் பகல் 3.30 மணிக்கு மீட்கப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று இரவு அறிவித்தது. வவுனியா செயலகத் தில் வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 30 லொறி களில் ஒன்றிலிருந்தே வெடி பொருள்கள் மீட்கப்பட்டன.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சு பின்வருமாறு விவரித்துள்ளது. ஓமந்தைச் சோதனை நிலையத்தில் படையினர் லொறிகளை சோதனை செய்தபோது குறிப்பிட்ட ஒரு லொறியிலிருந்து வெடிபொருள் மீட்கப் பட்டது. அதனையடுத்து மேலதிக விசாரணைக்காக லொறியின் சாரதியை படையினர் தடுத்துவைத்துள்ளனர். லொறியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக் கிழமை வன்னிக்குச் செல்லவுள்ள வாகன அணியில் அரச அதிபரின் 30 லொறிகளும் உலக உணவுத் திட்டத்தின் 30 லொறிகளும் செல்லவிருக் கின்றன- என்று தெரிவிக்கப்பட்டது (அ-1)

## இராணுவச் சோதனைச் சாவடி மீது திருமலையில் புலிகள் தாக்குதல்!

திருகோணமலை, ஒக். 01

திருமலை, சேருநுவர, கந்தளாய்ப் பகுதியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடி மீது நேற்றுமுன்தினம் மாலை 9 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோ அணியினர் தாக்குதலை நடத்தி னர். அத்தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டனர் என்று புலிகள் தரப்பில் நேற்று அறி விக்கப்பட்டது. (14ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிக்கடலில் புலிகளின் படகுகளை மூழ்கடித்ததாக கடற்படை அறிவிப்பு

கொழும்பு, ஒக். 01

கிளிநொச்சி, பூநகரி கடற்பரப்பில் விடுதலைப் புலிக ளின் இரு படகுகளை கடற்படையினரின் அதிவேக படகு கள் தாக்கி அழித்தன என்று படைத்தரப்பில் நேற்று அறி விக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கல்முனை 'பொயின்ட்' கடற்பரப்பில் இருந்து பூநகரிக் கடற்பரப்பை நோக்கி வந்துகொண்டிருந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னேரியில் கடுஞ்சமர்

வவுனியா, ஒக்.01

வன்னேரிக்கு மேற்கு களப்பகுதியில் நேற்றும் படையினரின் முன்நகர்வு நடவடிக்கைக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வன்னேரியின் மேற்கு களமுனைப் பகுதியில் மூன்றாவது நாளான நேற்று செவ்வாய்க்கிழமையும் படையினர் முன்நகர்வுத் தாக்குதல் (14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் ஓடுபாதை படையினரின் கட்டுப்பாட்டிலாம்

### இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, ஒக்.01

முல்லைத்தீவு மாவட்டம் பனிச்சன்குளம் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் விமான ஓடுபாதை நேற்று படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டி ருக்கின்றது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:- முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் 7 கிலோமீற்றர் வடமேல் புறமாக இந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் முன்நகர்வு நடவடிக்கை முறியடிப்பு என புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 01

மணலாறு கள்முனைகளில் இருந்து நேற்றுமுன் தினம் படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான முன்நகர்வு நடவடிக்கையினை தாம் முறியடித்திருக்கின் றனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை சுமார் 5.30 மணியள வில் ஆறு முனைகளில் இருந்து செறிவான ஷெல் தாக்கு தல்களுடன் பெருமெடுப்பில் முன்நகர்வினை படையி னர் ஆரம்பித்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## புனித நோன்புப் பெருநாள் இன்று

கொழும்பு, ஒக். 01

புனித சவ்வால் மாதத்தின் தலைப்பிறை நேற்றுமாலை தென்பட்டதையடுத்து புனித ரமழான் பெருநாள் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

புனித சவ்வால் மாதத்தின் தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்றுமாலை கொழும்பு பெரியபள்ளிவாசல் மத்ரஸாவில் ஹமீதியா மண்டபத்தில் பிறைக்குழுவின் தலைவர் அல்ஹாஜ் றியால் (14ஆம் பக்கம் பார்க்க)



### ராஜஸ்தான் மலைக்கோவிலில் குண்டுப் புரளியால்

## சாமுண்டா தேவி ஆலயத்தில் நவராத்திரிக்குச் சென்ற பக்தர்கள் நெரிசலில் சிக்கி 177 பேர் மரணம்

### பிரமாண்டமான கதவும் சரிந்து விழுந்தது

கொழும்பு, ஒக்.01

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் பிரதேசத் தில் மலை உச்சியில் உள்ள புகழ்பெற்ற சாமுண்டாதேவி கோவிலில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கி 177 பேர் பலி யாகியிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நவராத்திரி பூஜை ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு ஆலய தரிசனம் செய்வதற்காகச் சென்றிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் திடீரென வெடிகுண்டுப் புரளி பரவியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

மலை உச்சியிலுள்ள இந்த ஆலயத்தில் நவராத்திரி பூஜையில் கலந்துகொண்டு தரிசிப்பதற்காக ஆயிரக் கணக்கான பக்தர்கள் சுமார் நாலரைக் கிலோமீற்றர் மலையில் ஏறிக்கொண்டிருந்த (14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியும் திரு.திருமதி சிவபாஸ்கரன் தம்பதியினரின் புதல்வியுமாகிய

**செல்வி சி.வைஸ்ணவி**

2008ஆம் ஆண்டு தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியமையைப் பாராட்டுவதுடன் பல்கலையும் கற்று வாழ்வில் உயர்ந்திட மேலும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வானத்தில் இருந்து வண்ணமுற வாழ்த்தும் பெரியப்பா மற்றும் பெரியம்மா, சுதர்சன் அத்தான், கௌரி அக்கா, மாதங்கி அக்கா, ஸ்ரீ அண்ணா, பிருந்தாக்கா, அப்பப்பா, அம்மம்மா மற்றும் மாமா குடும்பத்தினர்

''ஸ்ரீ ரங்கம்'',
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (78896)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன்

**செல்வன் கனகேஸ்வரன் ஆதித்தன்**

2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 120 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார். அவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க கற்பக விநாயகர் ஆசி வேண்டி பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்:
விளையாட்டரங்க வீதி, அப்பா, அம்மா, தாத்தா,
கோப்பாய் தெற்கு, அம்மம்மா, சித்தப்பாமார்,
கோப்பாய். சித்திமார், மாமா, தங்கை ஜனுசா.
(78897)

## கூறுவிலை கோரல்

திருநெல்வேலி பொதுச்சந்தையில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய கட்டடத்தினை உடைத்து அகற்றுவதற்கு பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இதனைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தாங்கள் கொள்வனவு செய்ய விரும்பும் பெறுமதியினைக் குறிப்பிட்டு மூடிய உறையினுள் இட்டு 10.10.2008 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் **செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி,** கொக்குவில் எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இதன் ஆகக்குறைந்த கொள்வனவுப் பெறுமதி ரூபா 400,000/– ஆகும்.

குறிப்பு: கூறுவிலை மூலம்தெரிவு செய்யப்படுபவர்கள் உரிய தொகை முழுவதையும் ஒரே தடவையில் செலுத்தி உரிய கட்டடத்தினை 15 நாள்களுக்குள் இடித்து அகற்றுதல் வேண்டும்.

மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை. (சி/554927)

நல்லூர் பிரதேச சபை,
கருவப்புலம் வீதி,
கொக்குவில்.

## சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.1

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்தும் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (203)

* * *

சங்கானை, ஒக்,1

சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலைச் சிறார்கள், சங்கானை சலேசியார் முன்பள்ளிச்சிறார்கள், சங்கானை நீதவான குடியிருப்பு முன்பள்ளிச் சிறார்கள், சங்கானை அறிவொளி முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (203-29)

## இளையதம்பி வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஒக்.1

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும் கலந்து கொள்வர். (1)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 44 வயதுடைய கௌரவமான சுயதொழில் பார்க்கும் ஒருவர் வாழ்க்கைத் துணையைத் தேடுகிறார். வாழ்விழந்தோரும் கவனத்தில் எடுக்கப்படுவர். முதற்கடிதத்தில் முழு விவரத்துடன் தொடர்புகொள்ளவும்.

விள.இல: 3146,
(78886) மே/பா உதயன்.

## கார் தேவை

EN : 8794, EN 9487 என்னும் இலக்கங்கள் உடைய கார்களை வைத்திருப்பவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்புகொள்ளவும்.முன்னையஉரிமையாளர்இக்கார்களைவாங்கவிரும்புகின்றார்.

தொடர்பு:0779602738,0602217152
(788026)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலய மாணவி

**செல்வி குமார் துஷாந்தினி**

2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 116 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு, அவரை வழி நடத்திய பாடசாலை அதிபர், ஏனைய ஆசிரியர்களுக்கும் மற்றும் வகுப்பாசிரியை சிந்துயா, ரியூசன் ஆசிரியை யாழினிக்கும் நன்றி தெரிவிப்பதுடன் அவர் மேன்மேலும் கல்வியில் உயர்வடைய கதிர்வேலாயுத சுவாமியை வேண்டுகின்றோம்.

சரவணை கிழக்கு,
வேலணை. (78856)

வாழ்த்துவோர்:
தாத்தா, அம்மம்மா, அப்பப்பா.

## அரசாங்க அறிவித்தல்
## உணவுப்பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

நாவற்குழி - II, III மற்றும் கோண்டாவில் அரச உணவுக்களஞ்சியங்களில் பின்வரும் பொருள்கள் விற்பனைக்கு உள்ளன.

| களஞ்சியம் | பொருள் |
|---|---|
| நாவற்குழி - II | தேயிலை, புளி, |
| நாவற்குழி - III | பருப்பு (மஞ்சள், சிவப்பு), |
| கோண்டாவில் | பருப்பு (மஞ்சள், சிவப்பு) |

இப்பொருள்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருள்களை கொள்வனவு செய்யவிரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் ''உணவுப் பொருள்களுக்கான கூறுவிலை'' என குறிப்பிட்டு 10.10.2008 ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

பொருள்களை பார்வையிட விரும்புவர்கள் அரச உணவுக் களஞ்சியங்களில் வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை அதற்குரிய களஞ்சியங்களில் பார்வையிடலாம்.

கூறுவிலைகள் 10.10.2008 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமூகமளித்திருக்க முடியும்.

பொருள்களை எடுப்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கி கிளையில் பணத்தை உடனடியாக செலுத்தி பொருள்களை உடனடியாக களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும்/மாவட்ட செயலரும்,
யாழ். மாவட்டம்.

## JAFFNA COLLEGE, VADDUKODDAI
## ADMISSION -2009
### FOR GRADE 01 AND GRADE
## மாணவர் அனுமதி - 2009
## தரம் 01 - தரம் 06

01) அ) விண்ணப்பப் படிவங்கள் 02.10.2008 முதல் 24.10.2008 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ) எக்காரணம் கொண்டும் 24.10.2008 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
இ) எமது விண்ணப் பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 31.10.2008 வெள்ளிக்கிழமை.
அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

02) பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

03) தரம் 1 இற்கான விண்ணப் பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படல் வேண்டும்.

04) விண்ணப்பப் படிவங்கள் ஞாயிறும் விடுமுறை தினங்களும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

05) ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00

06) வயதெல்லைகள்
I. தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2003 இற்கும் 31.01.2004 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
II. தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1998 இல் அல்லது அதற்குப்பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

07) பிரவேச/நேர்முகப்பரீட்சை
I. தரம் 1 இற்கான நேர்முகப்பரீட்சை 22.11.2008 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
II. தரம் 6 இற்கான தேர்வுப் பரீட்சை 12.11.2008 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

08) மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளை உடைய மாணவ - மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் கூடிய விடுதி, நூலகப்பாவனை மற்றும் சிறந்த புலமைப் பரிசில்கள் எம்மால் வழங்கப்படும்.

(சி/554928) அதி[illegible]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இ.சாரங்கன் புள்ளிகள் 139
ஜெ.டயானந்தன் புள்ளிகள் 157
லோ.சிவலக்சன் புள்ளிகள் 140

2008 ஆம் ஆண்டு தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது மணிக்கூட்டு ஒழுங்கையைச் சேர்ந்த மூவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**மணிக்கூட்டு ஒழுங்கை நண்பர்கள்.**

## பாசுபதனுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.1

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2008 இல் தமிழ் மொழியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதன் பாடசாலை சமூகத்தினரால் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் கு.சிவானந்தம் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

பரீட்சையில் சித்தி பெற்ற வித்தியாலயத்தின் ஏனைய பத்து மாணவர்களும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (1-207)

கணிவித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...
Special Offer
100% செய்முறைப்பயிற்சி
கணிவித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...
தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Fee 1,500/= only ஆரம்பம் : 01/10/2008, 05/10/2008, 08/10/2008 10.00 a.m. & 3.00 p.m.
Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation of - O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
DMI
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

UDUVIL GIRLS' COLLEGE

## Invitation

' Thank you for the music...'

you are cordially invited to a western music performance by finalists of

**Talent Search 2008**

at

*The Chundikuli Girls' College Hall*

Wednesday, October 1.2008, 10 a.m.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிர்வாகத்தில் காணப்படும் குறைபாடுகளை நேரடியாகவும் வெளிப்படையாகவும் எடுத்துக் கூறலாம்

## அவற்றுக்கு உரிய தீர்வு காணப்படும் என்கிறார் கல்விப் பணிப்பாளர்



அச்சுவேலி, ஒக்.1

சமகால விஞ்ஞான ரீதியிலான நிர்வாக நடைமுறையில் கல்வி நிர்வாகத்தில் எந்த விதமான ஒளிவு மறைவுக்கும் இடமில்லை யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் தமது கருத்துகளை, குறைபாடுகளை, தேவைகளை வெளிப்படையாகவும், நேரடியாகவும் என்னைச் சந்தித்து எடுத்துக் கூற முடியும். அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்.

இது தொடர்பாக அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி நிர்வாகச் செயற்பாடுகளில் சமூகத்தின் கருத்துக்களை, உண்மையான தகவல்களைக் கண்டறிய வேண்டியது அவசியம். அந்த வகையில் கல்விச் சமூகத்தினர் வெளிப்படையாக தமது கருத்துகளைத் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டியதும் கட்டாயமாகும்.

விஞ்ஞான ரீதியிலான சமகால நிர்வாக நடைமுறையில் எந்தவிதமான ஒழிவு மறைவுக்கும் இடமின்றி வெளிப்படையான தொடர்பாடல் நிகழ வேண்டும். அந்த வகையில் எனது அலுவலக நேரத்திலோ அல்லது எனது இல்லத்திலோ பொருத்தமான நேரத்தில் என்னை சந்தித்து கலந்துரையாடலாம். இந்த வகையில் மாணவர்கள் கூட எந்தவிதமான தயக்கமுமின்றி என்னைச் சந்தித்து வருகின்றனர்.

வெளியில் இருந்தவாறு கல்விப் புலத்தை தேவையற்ற விதத்தில் விமர்சனம் செய்வதற்கு இடமளிக்காமல் கல்வி புலத்தில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாக ஏற்புடைய விதத்தில் தீர்த்து வைக்க முன்வரவேண்டும். இந்த வகையில் கல்விச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சகல தரப்பினரும் இணைந்து செயற்படுவது ஆரோக்கியமான கல்வி நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் கல்வியின் மேல் நிலைப்பட்ட அபிவிருத்திக்கும் உதவும்.

எனது கவனத்துக்குக் கொண்டு வரப்படும் யாழ்.கல்வி வலயம் சார்ந்த கல்விக் குறைபாடுகள், தேவைகள் ஏற்புடைய விதத்தில் தீர்வு காண்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பரீட்சை முடிவுகளில் வீழ்ச்சி நிலை காணப்படும் பாடசாலைகள் தொடர்பாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு எதிர் காலத்தில் உயர்நிலை முடிவுகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர்களின் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு முழுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மாணவர்களின் முன்னேற்றம் என்ற போர்வையில் அதிபர்கள், ஆசிரியர்கள் மீது தேவையற்ற நிர்வாக அடக்கு முறைகளையோ, உள நெருக்கடிகளையோ, தமது சொந்த விருப்பு வெறுப்புக் களையோ திணிப்பதை அனுமதிக்க முடியாது. ஆசிரியர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள தனிப்பட்ட பாதிப்புகளை வெளிப்படையாக எனது கவனத்துக்கு தெரியப்படுத்தும் இடத்து உடனடியாக தீர்வு காணப்படும். நேரடியாக நானே அந்த விடயங்களைக் கையாண்டு வருகின்றேன்.

ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் கருத்துகள், ஆலோசனைகள் வரவேற்றகப்படுகின்றன. தொழிற்சங்க பிரதிநிதிகள் பொதுப்படையாக கருத்துக்கள் ஆலோசனைகளை முன்வைப்பது குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஒழுங்கு முறையாக தொழிற்படுபவர்களையும்; நிர்வாகம் செய்பவர்களையும்; புண்படுத்துவதாக அமைந்துவிடும். எனவே குறைபாடுகள் எந்தப் பாடசாலையில் அல்லது எந்த இடத்தில் உள்ளன என்பதை வெளிப்படையாக சுட்டிக்காட்டுவது உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு சீர்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்-என்றார். (50-11)

# சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்திக்கென 12 லட்சம் ரூபா ஒதுக்கீடு

நல்லூர், ஒக்.1

சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் அபிவிருத்தி நடவடிக்கைக்கென பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவு நிதியிலிருந்து 12 லட்சம் ரூபாவை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீகாந்தா ஒதுகீடு செய்துள்ளார்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் திற்கு ஒருலட்சம் ரூபாவும், பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒருலட்சம் ரூபாவும், அராலி இந்துக் கல்லூரிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சங்கானை ஸ்தான அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மூளாய் அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும், வட்டுக் கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சில்லாலை றோ.க.தமிழ் கலவன் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும், வட்டுக் கோட்டை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், அராலி வடக்கு இந்து கலாசார இளைஞர் சனசமூக நிலைய முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபாவும், அராலி மேற்கு சன சமூக நிலைய முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபாவும், சங்கானை தெற்கு சவேரியார் முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபாவும், பண்டத்தரிப்பு பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபா வும் ஒதுக்கப்பட்டுள்ளன. (203-111)




# காலபோக நெற்செய்கையாளர்களுக்கான மானிய உரம் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது

வடமராட்சி, ஒக்.1

யாழ்.குடாநாட்டில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்குத் தேவையான மானிய உரம் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு கமநல சேவை நிலையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களைப் போல் யாழ்.குடாநாட்டு விவசாயிகளுக்கு இம்முறை மானிய விலையான ஓர் அந்தர் 350 ரூபா வீதம் மானிய உரம் வழங்கப்படவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் விவசாய அமைச்சு தேச நிர்மாண அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் தொடர்பு கொண்டு குடாநாட்டு விவசாயிகளுக்கும் மானிய விலைக்கு நெற்செய்கைக்கான உரம் வழங்கப்பட வேண்டும் எனக் கேடடுக் கொண்டதன் பேரில் மானிய விலைக்கு உரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

குடாநாட்டுக்கு மானிய உரத்தை எடுத்து வருவதற்கு 16 மில்லியன் ரூபா செலவாகின்றதென்றும் அதனை சம்பந்தப்பட்ட அமைச்சுகள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

குடாநாட்டு விவசாயிகளும் மானிய விலையில் உரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட அமைச்சும் விரும்பம் தெரிவித்ததாலேயே மானிய விலையில் குடாநாட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்குவது சாத்தியமாகிறது என அரச அதிபர் தெரிவித்தார். (203-236)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன

யாழ்ப்பாணம்,ஒக்.1

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதில் சித்தியடைந்தவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைக்கான திகதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. செயன்முறைப் பரீட்சை இடம்பெறவுள்ள கால விவரம் வருமாறு:-

| எழுத்துப் பரீட்சை இடம்பெற்ற திகதி | | செயன்முறைப் பரீட்சை நடைபெறும் திகதி |
|---|---|---|
| 2008.09.16 | - | 03.10.2008 மு.ப 9.30 மணி |
| 2008.09.18 | - | 04.10.2008 மு.ப 9.30 மணி |
| 2008.09.22 | - | 06.10.2008 மு.ப 9.30 மணி |
| 2008.09.23 | - | 07.10.2008 மு.ப 9.30 மணி |
| 2008.09.24 | - | 08.10.2008 மு.ப 9.30 மணி |
| 2008.09.25 | - | 09.10.2008 மு.ப 9.30 மணி |
| 2008.09.26 | - | 10.10.2008 மு.ப 9.30 மணி |




ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பருத்தித்துறை, தும்பளை கிழக்கில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளில் 35 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

உதயசூரியன் கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ்.மதிவாணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், ஜே/405 கிராம சேவையாளர் ரவீந்திரன், ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ்.கே.சேவியர்,யாழ்.மாவட்ட இணைப்பாளர் கு.ஹரிஹரன், பருத்தித்துறை தேவசபை போதகர் சி.சிதம்பரப்பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் உரையாற்றுவதையும் வீடு [illegible] படங்களில் காணலாம். (203)

# நூல் வெளியீட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.பல்கலைககழக கலவயயலதுறை உதவி விரிவுரையாளா ஆ.நித்திலவர்ணன் எழுதிய நூல்களின் வெ ரியீட்டு விழா இன்று புதன்கிழமை மு. 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி த.கலாமணி தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில் பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் க.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (95)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

விசுவலிங்கம் முகிலன் எழுதிய கவிதைகளின் தொகுப்பு நூலான 'மனத்திரை மேகங்கள்' என்னும் நூலின் வெளியீடு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை அரங்கில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனப் பேராயர் டானியல் எஸ்.தியாகரா ஜாவும், சிறப்பு விருந்தினராக நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ச. சத்தியவரதனும் கலந்து கொள்வர்.

நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். (202)

# செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் கணனிப் பயிற்சிநெறி

சண்டிலிப்பாய்,ஒக்.1

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவினரால் கணனிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சி பெற விரும்புவோர் பழைய பொலிஸ் நிலையம், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் உள்ள பிரிவு அலுவலகத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 10 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மேற்படி காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்வதற்கு பிரிவுக் காரியாலயத்துடன் அல்லது 021 222 2886 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சண்டிலிப்பாய் பிரிவு செயலர் தெரிவித்துள்ளார்.

# இலவச தேவார பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் யாழ்ப்பாணம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியூலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் முத்தமிழரசி, செல்வி புஷ்பா செல்வநாயகம் அவர்களின் அனுசரணையுடன் வகுப்புகள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

அருள் இசையரசு தெய்வத் தமிழிசைச் செல்வர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் வகுப்புகளை நடத்தவுள்ளார். பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபரிடம் பெயர்களை பதிவு செய்து மேற்படி இசை வகுப்பில் மு.ப.11 மணிக்கு கலந்து கொள்ளலாம்.

வார இறுதி நாள்களில் பி.ப.3.30 மணிக்கு வகுப்புகள் தொடர்ந்தும் நடைபெறும். இவ் வகுப்புகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தியிடம் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருடர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு படையினர் அறிவுறுத்து

நல்லூர்,ஒக்.1

குடாநாட்டில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பொது மக்களை விழிப்புடன் செயற்படுமாறு படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

இரவு நேரங்களில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் இனந் தெரியாதவர்களின் நடமாட்டம் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள படை முகாம்களுக்கு அறிவிக்குமாறும் குறிப்பிட்டுள்ளனர். பரவலாக ஒலிபெருக்கி மூலம் படையினர் இந்த அறிவிப்பை விடுத்து வருகின்றனர். (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் 2008ஆம் ஆண்டிற்கான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த திரு.திருமதி இராஜேஸ்வரன் தம்பதியரின் புதல்வன் செல்வன்

**இராஜேஸ்வரன் தனீஷன்**

அவர்களைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

அப்பம்மா, தயா அத்தை குடும்பம்,
சித்தியாத்தை குடும்பம் (அமெரிக்கா),
உமா அத்தை குடும்பம் (கனடா),
வரோச் சித்தப்பா குடும்பம் (லண்டன்),
தர்மரத்தினம் பெரியப்பா குடும்பம்.
"இராஜஸ்தலம்", அல்வாய்.

(சி/554925)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **என்.எம்.கந்தசாமி**

குடாநாட்டின் மூத்தபத்திரிகையாளரும் எமது சங்கத்தின் உப தலைவருமான என்.எம்.கந்தசாமி 28.09.2008இல் காலமானதை அறிந்து நாம் கவலை அடைகின்றோம். குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

வட.இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




அமரர்
**சிங்காரவேலு சீதா**

தோற்றம்: 22.11.1962
மறைவு: 30.08.2008

30.08.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.10.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.
(78889)
மாமனும் குடும்பத்தினரும்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **சின்னத்தம்பி கனகசபாபதி**
(படமாட உரிமையாளர்- பண்டத்தரிப்பு)

தோற்றம்: 08.08.1938 திதி: துதியை மறைவு: 13.10.2007

தெய்வமாய் தந்தையாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தந்தையே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
மாறாது எம் துயரம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு.
குடும்பத்தினர்.
(78893)

## தவறிவிட்டது

திருநெல்வேலி,கலாசாலை வீதியைச் சேர்ந்த குமரகுருதாசன் தர்சிகா என்பவரது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அ.அட்டை, கையடக்கத் தொலைபேசி என்பன நல்லூருக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (சி/554919)

## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



எமது கல்லூரியின் 19 வயதுப் பிரிவு உடற்பயிற்சி அணி உடற்பயிற்சிப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொள்வதற்குப் பேருதவி புரிந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ்தேவானந்தா**

அவர்களுக்கு மனம்நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(78892)

கல்லூரிச் சமூகம்,
யா/புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.1

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெறும் 13, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**13 வயதுப் பிரிவு**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம். (50-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வி.கவும் ஈகிள் வி.கவும் மோதுகின்றன. (1)

## நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்திற்கான நவராத்திரி விழா புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கர முருகமூர்த்தி ஆலயத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு தலைவர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெற்றது.

புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் உள்ள விறுமர் ஆலயத்தில் நவராத்திரி விழா நேற்று ஆரம்பமாகியது.

விஜயதசமி தினத்தன்று ஆலயத்தில் கலை நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (207)

* * *

ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலையில் நவராத்திரி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தில் தலைவர் சைவ மகாஜனா வித்தியாலய அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

கோண்டாவில் கிழக்குக் கேணியடி காளி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரிப் பூசைகள் நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக் கிழமை கேதாரகௌரி விரத பூசைகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 21 நாள்கள் தொடர்ந்து நடைபெறும். மேற்படி விரதத்தில் கௌரி காப்பு பெற விரும்புபவர்கள் தத்தமது பெயர், நட்சத்திரத்துடன் முற்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு ஆலயத் திருப்பணிச் செயலாளர் கேட்டுள்ளார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவி

**செல்வி இ.திலக்ஸ்சனா**

2008ஆம் ஆண்டு தரம்-5 -புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவரைப் பாராட்டுவதுடன், இவரை பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதுடன், இவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெற்றோர், வாசுமாமா குடும்பம், அப்பப்பாமார், அப்பம்மாமார், மாமாமார், அத்தைமார் மற்றும் உறவினர்கள்.

(78890)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி குகனேந்திரஐயர்- சசிகலாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி

**கு.தாட்சாயினி**

(தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம்) 2008ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 126 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்கு அவரைப் பாராட்டுவதோடு, மேன்மேலும் கல்வியில் சிறப்புற வேண்டும் என்று வாழ்த்தி அவரை நெறிப்படுத்திய வகுப்பாசிரியருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அக்கா திவ்யா, அத்தான் கிஸ்ணாகரன்.

(இ/554922)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியும் திரு.திருமதி பாஸ்கரமூர்த்தி தம்பதியரின் செல்வப் புதல்வியுமான **திவ்யா** 2008ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு பாராட்டுவதோடு, மேன்மேலும் உயர் கல்விகள் பலகற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மு.அமிர்தலிங்கம் (பேரன்), பிரான்சில் வசிக்கும் மாமாமார்- பரமானந்தம், சர்வானந்தம், கிருபானந்தம், சந்திரதாசன் மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் கோகுலதாசன்.
குமர கோட்டம், கோண்டாவில்.

(78891)

## யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குக் குழுவும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் தினம்

ஒக்ரோபர் 01-2008



தலைமை: திரு.கி.குணாளசிங்கம்
பிரதமவிருந்தினர்: உயர்திரு.க.கணேஷ்
(அரச அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்: திரு.ஆ.சிவசுவாமி
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
கௌரவ விருந்தினர்கள்: திரு.விக்டர் மோசஸ்
(மாவட்ட முகாமையாளர், சிறுவர் பாதுகாப்பு இலங்கை, யாழ்ப்பாணம்)
திரு. டானி ஆர்க்கி
(Programme Specialist, Unicef, Jaffna)
இடம்: வீரசிங்கம் மண்டபம்
காலம்: 01.10.2008 புதன்கிழமை காலை 9.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"பிள்ளைகளுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியானதாக்குவோம்"

மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, யாழ்.மாவட்டம்.
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
(78888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர்கள் எமது மதிப்பிட முடியாத பொக்கிசங்கள்
# அவர்களை அரவணைத்து வாழ வைப்பது எம் கடமை

கடந்த காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் அல்லற்பட்டு அவலப்பட்டு அனாதைகளாக்கபட்டவர்களில் பெரும்பாலானோர் முதியவர்களே யாவர். இப்படிப்பட்ட அனாதரவாக்கப்பட்ட முதியவர்களுக்குப் புகலிடம் அளிக்கும் பல முதியோர் இல்லங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே இயங்குகின்றன. ஆனால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே ஒரே ஒரு அரச முதியோர் இல்லமாகத் திகழ்ந்து வருவதென்றால் அது வட மாகாணத்திலுள்ள யாழ்.மாவட்டத்தின் தென்மராட்சி (சாகவச்சேரி) பிரதேச செயலர் பிரிவிலே அடங்கும் கைதடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள சாந்தி நிலையம் என்றால் அது மிகையாகாது.

இந்த இல்லமானது வறுமையில்வாடும், ஆதரவற்ற பராமரிக்க எவருமின்றித் தத்தளிக்கும், இருக்க இருப்பிடமின்றித் தவிக்கும், முதியோர்களுக்குப் புகலிடம் அளிக்கும் ஒரு சாந்தி நிலையமாக மிளிர்கின்றது.

இந்த அரச முதியோர் இல்லமானது 26.01.1952 இல் டி.எஸ்.சேனநாயக்கா அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு, சேர்.ஜோன்.கொத்தலாவெல அவர்களினால் 02.10.1954 இல் திறந்து வைக்கப்பட்டது. தற்போது வடக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. முதியோர்களுக்குச் சாந்தியளிக்கும் இந் நிலையத்தில் ஆண்கள் 104 உம், பெண்கள் 86 உம் ஆக மொத்தம் 190 முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த முதுசங்களைப் பராமரிப்பதற்கு அத்தியட்சகர், பொது முகாமைத்துவ உதவியாளர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்,மருத்துவ தாதிகள், பரிசாரகர்கள், தொழிலாளிகள், சுகாதாரத் தொழிலாளிகள் என 40 பேர் வரையில் வடக்கு சமூக நலத்துறை திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் முதியவர்களுக்கு உறைவிடம், உணவு, உடை, மருத்துவம் போன்ற சகல வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த இல்லத்தில் பராமரிக்கப்படும் முதியோர்களையும் இல்லத்திற்கு வெளியே வதியும் முதியோர்களையும் கௌரவிக்கும் பொருட்டு சர்வதேச முதியோர் வார விழா இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதி வரையும் கொண்டாடப்படும்.

### பாதுகாப்பது எமது கடமை

வருடங்கள் 60 உருண்டோடியதும் முதுமை எங்களை ஆட்கொள்கின்றது. அப்போது நாம் முதியவர்கள் என்ற நாமத்தைப் பெறுகின்றோம். இன்று எமது சமுதாயத்திலே இளம் சமுதாயத்தை விட முதியவர்களே எண்ணிக்கையிலே கூடுதலாகக் காணப்படுகின்றார்கள். முதியவர்கள் முதுமைக் கோலத்துடன் அவதரித்தவர்கள் அல்ல. அன்று அவர்களையும் ஓர் அன்னை பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து தன் உதிரத்தைப் பாலாக ஊட்டித் தரணியில் தவளவிட்டு மழலை மொழி பேசி இளமைத் துடிப்புடன் இளைஞனாக வலம் வந்து பற்பல சாதனைகள் புரிந்து, படித்துப் பட்டம் பெற்று, அறிஞராய், டாக்டராய், பொறியியலாளராய், உயர் அதிகாரியாய் பதவி வகித்து பற்பல நூல்களைப் படைத்து இன்று உடல் தளர்ந்து முதியோர்களாக விளங்குகின்றார்கள். இவர்கள் எமது சொத்து. பொக்கிஷங்களை நாம் எவ்வாறு அக்கறையுடன் பாதுகாக்கின்றோமோ அதேபோல எமது முதியோர்களையும் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இக் கடமையினைச் சாந்தி நிலையம் நல்ல முறையில் செய்து வருகின்றது.




எமது நாட்டிலே உள்ள கோயில்கள், குளங்கள், தொழிற்சாலைகள், கல்விக் கூடங்கள், கலாசார விழுமியங்கள் போன்ற இன்னோரன்ன பொக்கிஷங்களை உருவாக்கியவர்கள் யார்? எமது முதியோர்கள் தான் என்றால் அது மிகையாகாது. இன்று எமது மண்ணிலே நாடளாவிய பற்பல பிரச்சினைகளில் முதியோர்கள் முகங்கொடுத்து, அல்லற்பட்டு, அவலப்பட்டு வாழும் நிலை உருவாகிக்கொண்டு வருகின்றது. இதற்கெல்லாம் காரணம் என்ன? முதியோர்கள் மதிக்கப்பட்டு போற்றப்பட்டு வராமையே.

எமது கலாசாரத்தைக் காத்த, எமது நாட்டைக் காத்த, எமது உயிரைப் பாதுகாத்த உத்தமர்களான முதியவர்கள் மதிப்பிட முடியாத பொக்கிஷங்கள் அவர்களைப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இக் கடமையினைச் சாந்தி நிலையம் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

அல்லும் பகலும் உழைத்து சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு உழைத்த முதியவர்களின் பெருமைகளையும் குணங்களையும் எண்ணிப் பார்த்தால் இவ்வளவு துன்பங்கள் முதியவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. தன்னைத்தானே உருக்கி ஒளி கொடுக்கின்ற மெழுகுவர்த்தியைப் போன்று கிராமம் வளர்வதற்காக, மாகாணம் வளர்வதற்காக, பிரதேசம் வளர்வதற்காக, நாடு வளர்வதற்காக அன்று நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துத் தம்மைத் தாமே உருக்கி இந்த நாட்டுக்காக, இந் நாட்டு மக்களுக்காக ஒளி கொடுத்தவர்கள் ஊன்று கோலாக நாட்டு மக்களுக்குத் தென்பட்டவர்கள் மேலும் பல துறைகளில் மக்கள் வளர்வதற்கு அரும்பாடுபட்டவர்கள், சமுக மக்களை ஒற்றுமையாக வாழ வைத்தவர்கள் யார்? எம் முதியவர்கள் தான். அவர்கள் இன்றைய நாட்டின் ஆணிவேர்கள் ஆவர். இப்படியான இவர்களை எமது சாந்தி நிலையம் பாதுகாத்து வருகின்றது.

இன்றைய இளம் சமுதாயமானது முதியவர்களிடமிருந்து எவ்வளவோ அனுபவப் பாடங்களைக் கற்றுணர வேண்டியுள்ளது. இவற்றை எல்லாம் சிந்திக்காது பலர் முதியோரைப் பார்த்து எள்ளி நகையாடுவதும், கேலி செய்வதும் தங்களது குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இந்த நிலை மாற வேண்டும். எமது முதியோர்களை எல்லோரும் மதிக்க வேண்டும். அன்பு செலுத்த வேண்டும். உதவிசெய்ய வேண்டும். காலச் சக்கரத்தின் சுழற்சியால் தற்காலத் துடிப்புள்ள இளைஞர்கள் பிற்காலத்தில் துடிப்பற்ற வயோதிபராக வருவோம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். எனவே எதிர்வரும் சர்வதேச முதியோர் வாரமதில் எமது முதியோர்களைக் கௌரவித்து அன்பு செலுத்தி, மனதார ஆதரிப்போம், அரவணைப்போம் என உறுதி பூணுவோம்.

**என்.இராசலிங்கம்,**
அத்தியட்சகர்,
அரச முதியோர் இல்லம், கைதடி.

## எம்மை வாழவைக்க...

உயர்வும் தாழ்வும் எம்மை பரு
வாக்கிய முன்னோர்கள் தந்தது
அயராத உழைப்பை ஈந்தெம்மை
உருவாக்கி வாழவைத்தவர்களை பேண
இயலாது என்று கூறுதல் தகுமோ
அவர்கள் மனம் கோணாது
முதியவரைப் பேணுவோம் அவர்கள்
வாழ்த்துரைகளே எம்மை வாழவைக்கும்
- இராமஜெயபாலன்.

# சிறுவர்களை நற் பிரசைகளாக்கும் பொறுப்பு அவர்தம்
# பெற்றோரதும் சமூகத்தினதும் கைகளிலேயே!

சர்வதேச சிறுவர் தினத்தின் இவ்வாண்டிற்கான கருப்பொருள் ''பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சி யானதாக்குவோம்'' என்பதாகும். இக்கருப் பொருள் மக்கள் மத்தியில் கருத்தோட்டம் பெறுவதற்காக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களிடையேயும் சிறுவர் இல்லப் பிள்ளைகளிடையேயும் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். இவர்களை நன்னிலைப்படுத்துவது சமூகத்திலுள்ள ஒவ்வொருவருடையதும் மிக இன்றியமையாத பொறுப்பாகும். எம்மால் பல்வேறு தினங்கள் கொண்டாடப்படுகின்றன. இப் பல்வேறு தினங்




களும் ஒரு தினத்தில் மட்டும் கொண்டாடப்படுவதன் மூலம் நாம் குறிப்பிட்ட இலக்கை அடைவோமா? என்பது சிந்தனைக்குரிய ஒரு விடயமாகும். ஆனால் இத்தினத்தில் நாம் சிறுவர் தொடர்பாகச் சிந்தித்து சிறுவர்களுக்காக ஓர் உறுதி மொழியை எடுத்துக் கொள்வதற்கும் இக் கருத்தோட்டம் மக்கள் மத்தியில் செறிவாவதற்கும் ஒரு நுழைவாயிலாகவே இச் சர்வதேச சிறுவர் தினத்தை நாம் குறிப்பிடலாம். சிறுவர்கள் ஒவ்வொருவரும் பிறக்கும் போது புறச்சூழல்களால் (காரணிகளால்) எந்தவிதத்திலும் பாதிக்கப்படாமலே பிறக்கின்றார்கள். பின்பு அவர்கள் தாம் பிறந்த சூழல், பழகும் சூழல், வளரும் சூழல் போன்ற பல்வேறு புறக் காரணிகளினால் தாக்கப்பட்டு பல்வேறு விதமான மாறுதல்களைப் பெறுகின்றார்கள். இந்த வகையிலே சிறுவர்கள் பிறக்கின்றார்கள் என்று கூறுவதை விட உருவாக்கப்படுகின்றார்கள் என்பதே நடைமுறை வாழ்க்கையோடியைந்த யதார்த்தமாகக் காணப்படுகின்றது. இதனாலே தான் ''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்று சினிமா அடியொன்றிலே பெற்றாருடைய பொறுப்பு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிறுவர்கள் இளவயதில் பழகுகின்ற பழக்கங்கள்தான் அவர்களுடைய ஒழுக்கங்களாகப் பரிணமித்துப் பின் அவர்களுடைய வழக்கங்களாக மாறுகின்றன. எனவே இவ் வழக்கங்களுக்கு நாம் நல்லவற்றையே சிந்தித்து நல்வழியையே அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

பொதுவாக நாம் சிறுவர்கள் என்று சொல்கின்ற போது 18 வயதுக்குக் குறைந்தவர்களையே சிறுவர்கள் என்று சொல்கின்றோம். இந்த வயதெல்லை நாட்டுக்கு நாடு வேறுபட்டாலும் அனேகமான நாடுகள் இந்த 18 வயதெல்லையையே ஏற்றுக் கொள்கின்றனர். இலங்கையைப் பொறுத்த வரை இந்த வயதெல்லையே பின்பற்றப்படுகின்றது. உண்மையிலே இந்த வயதெல்லைதான் கவனமாக் கையாளப்பட வேண்டிய ஒரு பருவமாகும். களிமண்ணை வைத்துக் கொண்டு பல்வேறு விதமான பொருள்கள் ஆக்கப்படுகின்றன. அது போலவேதான் சிறுவர்களை வைத்துக் கொண்டு பல்வேறு விதமான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்தச் செயற்பாடுகளினால் சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படையுமேயானால் அதுவே சிறுவர்களுக்காக நாம் ஏற்படுத்தி கொள்ளும் சேவையாகக் கருதமுடியும். ஏனென்றால் இந்த வயதெல்லையில் நிற்பவர்கள் எது சரி எது பிழை எனப் பகுத்தறியும் ஆற்றலற்றவர்கள். உள்ளத்தில் தெளிந்த நீருக்கு ஒப்பானவர்கள். இதனாலேதான் இவர்கள் சரியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும், நெறிப்படுத்தப்பட வேண்டும். இதற்காகப் பெற்றோர், ஆசிரியர், சமூகம் என அனைவரும் இணைந்து சிறுவர்களுக்கு வளமான எதிர்காலம் காட்டிட முன்வர வேண்டும்.

ஆனால் துரதிஷ்டவசமாக பிள்ளைகள் சமூகத்தின் கோரப்பிடியினாலும் பெற்றோரின் அசமந்தப் போக்கினாலும் பல்வேறு விதமான பாதிப்புக்களை அனுபவித்து வருகின்றார்கள். இது இன்று மட்டுமல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்துதான் வருகின்றது. இப் பிடியிலிருந்து சிறுவர்களைக் காப்பதற்காக 1923 ஆம் ஆண்டிலிருந்து இது சிந்திக்கப்பட்டு வந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரை 1990 ஆம் ஆண்டிலிருந்துதான் இதற்குரிய செயற்பாடு ஆரம்பமாகின்றது. இன்று வரை இதன் செயற்பாடு அதி உன்னதமான [illegible] தாலும் ஏதோ ஒரு வகையில் சிறுவர் பாதிப்பு சமூகத்தில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. சிறுவர்கள் இன்றும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள். பல்வேறு விதமான கொடுமைப்படுத்தல் மற்றும் பாலியல் சுரண்டல்களுக்கும் ஆளாகி வருகின்றார்கள். அவர்களுடைய கருத்து மறுக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுமைகளிலிருந்து சிறுவர்கள் காக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து இக் கருத்தோட்டம் விதைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. நிழல் வழங்க வேண்டிய மரங்கள் இன்று பிள்ளைகளின் நிம்மதியை பறியெடுக்கின்றன. நிம்மதி இழந்த பிள்ளைகள் நிர்க்



கதியாக்கப்பட்டு குரல்வளை நசுக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்தப் புனிதமான இந்நாளில் சிறுவர்களுக்காக அவர்களின் குரல்கள் மேலோங்குவதற்காக அவர்களது கருத்துகளுக்குச் செவி சாய்ப்போம். அவர்களின் உலகை மகிழ்ச்சிகர மானதாக்குவதற்குப் பெற்றோர், ஆசிரியர், சமூகம் என நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம். அவர்கள் மகிழ்ச்சியின் பிடியில் வளமாக வாழ நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். இதற்கா கவேதான் நன்னடத்தை திணைக்களத்தினாலே நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அனைவரும் செயற்பட்டு வருகின்றார்கள். இவர்களின் கரங்களை வலுப்படுத்தவும் சிறுவர்களின் எதிர்காலத்தை பொற்காலமாக மிளிரச் செய்யவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட இந் நன்னாளில் அன்புக்கரம் நீட்டி அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தொகுப்பு: சி.சிவகரன்,**
*மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர்,*
*மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(படங்கள்: உதயன் ஆவணப்பகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



வெனிசுலா நாட்டில் விநோதங்களுக்குப் பஞ்சமேயில்லை. அந்நாட்டின் நில அமைப்பு முறை ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறான அம்சங்களோடு காணப்படுவதே இதற்குக் காரணமாகும். அவ்வகையில் வெனிசுலா நாட்டில் உள்ள விநோதமான வெப்ப நீர்வீழ்ச்சி ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள். வெப்பத்தோடு மிக வேகமாகப் பெருக்கெடுப்பதால் உண்டாகும் விசை காரணமாக, ஒருமுறை மேலெழுந்த பின்னரே, நீர் கீழே பரவியோடுகின்றது. அதனால் செங்குத்து நீரூற்று எனவும் இது அழைக்கப்படுகின்றது.



நியூசிலாந்திலுள்ள ஆட்டுப்பண்ணையொன்றில் இந்த அதிசய ஆறுகால் ஆட்டுக்குட்டி பிறந்துள்ளது. இவ்வாறு அதிக உறுப்புகளோடு பிறக்கின்ற பிராணிகள் இறப்பதே வழமை.

ஆனால் இயற்கையையும் சாவையும் வென்ற ஆட்டுக்குட்டி பிறந்து மூன்று மாதங்களாகியும் எவ்வித நோய்களுமின்றி ஆரோக்கியமானதாகவேயுள்ளது. ஆறுகாலிருந்தும் இந்த ஆட்டுக்குட்டியால் எழுந்து நடக்க முடியா துள்ளது.

---


மண்ணில்: 1952.12.24

# ஓராண்டு நினைவுகளில்...

விண்ணில்: 2007.10.13



## திருமதி இரத்தினசிங்கம் பரமேஸ்வரி

திதி: 01.10.2008 துதியை

உருகொடுத்தாய் உடல்கொடுத்தாய்
உதிரத்துடன் உயிரும் கொடுத்தாய்...
உணவுகொடுத்தாய் உறங்க வைத்தாய்
உண்மை அன்பு சொல்லிக் கொடுத்தாய்
உயர்த்தும் பண்பு கற்றுக் கொடுத்தாய்
உதவிகள் செய்ய உரம் கொடுத்தாய்...
உலகில் உள்ள எல்லாம் கொடுத்தாய்
நான் உனக்கு கொடுப்பதற்கு
உன்னைவிட உயர்ந்த ஒன்று உலகில் இல்லை
என்ன செய்ய என்தாயே...!!!

சீர்மையுள கணம்பார்த்து கூடமதின் ஒளியதனில்
சிந்தை மலரவே கரம் பிடித்து நாமும்
ஊர்வியக்க உனையே மனதார மனையேற்று
ஆர்ப்பரித்து என்வாழ்வு இணைந்தே இங்கிதமாய்
பார்தனில் என்பெருமை கோபுரமாய் அருகிருந்து
பதிவியக்க நாற்பது ஆண்டுகளாய் ஒளிதந்தாய்
தீர்வுதனை ஆண்டவனும் உனக்களித்து
ஆண்டொன்று
தரணியிலே மறைந்தாலும் உளமுனையே
மறவாது....

சிவசக்தி மோட்டோர்ஸ்,
பிரதான வீதி, பருத்தித்துறை.
021 226 4119, 077 3917195

கணவர்: வே.இரத்தினசிங்கம், மகன்: இ.சதீஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் ஜோடி திருச்செந்தூரில் இந்து முறைப்படி திருமணம்



இந்தியாவின் திருச்செந்தூர் கோயிலில் பிரான்சைச் சேர்ந்த இருவர் இந்து முறைப்படி திருமணம் செய்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் ஜிவோனோ பகுதியைச் சேர்ந்தவர் ராம் சேவியர் (70), அங்கு சரக்கு ஏற்றுமதி, இறக்குமதி முகவராகவுள்ளார். இந்து மதத்தின்பால் அதிகம் பற்றுக் கொண்டதால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு மனைவி, மகளை கடந்த 14 ஆண்டிற்கு முன் பிரிந்தார்.

அதன் பின் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்த அவருக்கும், சமூக சேவகியான அதே பகுதியைச் சேர்ந்த மேரிக்கும் (50) பழக்கம் ஏற்பட்டது.

இருவரும் சுற்றுலா விசாவில் அடிக்கடி புதுச்சேரி வந்து புகழ் பெற்ற கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வந்தனர். சீரடி சாயிபாபா, புட்டபர்த்தி சாயிபாபா, மேற்கு வங்கத்தின் மாதா, அமிர்தானந்த மயி ஆகியோரின் பக்தர்களாக மாறினர். திருவண்ணாமலை கோயில் கிரிவலத்திற்கு அடிக்கடி வரும் இருவரும் துறவிகள், சன்னியாசிகளைச் சந்தித்து ஆசி பெறுவர். அப்போது இல்லற வாழ்வு மூலமே இறைவனை அடைய முடியுமென அவர்கள் அறிவுரை கூறியுள்ளனர்.

அதையடுத்து, திருவண்ணாமலை சரஸ்வதி சத்ய கீர்த்தி சுவாமிகள் முன்னிலையில் திருச்செந்தூர் தூண்டிகை விநாயகர் கோயிலில் ராம் சேவியர் மேரியை இந்து முறைப்படி மாலை மாற்றி தாலி கட்டி மனைவியாக ஏற்றுக் கொண்டார். திருமணத்தின் போது ராம் சேவியர் பட்டுவேட்டி, சட்டையிலும், மேரி பட்டுச் சேலையிலும் இருந்தனர். அவர்களை ஏராளமானோர் வாழ்த்தினர்.

இந்தியாவில் இன்னும் பல கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்யவும், துறவிகளைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளோம். எங்களுக்கு இந்தியக் குடியுரிமை கிடைத்தால் ஆன்மீகப் பணியாற்ற உதவியாக இருக்கும் என தம்பதிகள் கூறியுள்ளனர்.

சியாம் - கொக்குவில்

# மோப்பத் திறனும் கேட்கும் திறனும் அதிகம் கொண்ட கரடி இனம்



கரடி (Bear)ஓர் ஊனுண்ணிப் பாலூட்டி விலங்கு. இவ்வினத்தைச் சேர்ந்த பனிக்கரடிகளும், கொடுங்கரடிகள் (Grizzly bear) என்னும் பழுப்பு நிறக்கரடிகளும் ஊனுண்ணிப் பாலூட்டிகள் யாவற்றிலும் மிகப் பெரியது. ஆசியக் கருங்கரடி போன்ற சில சிறியவகைக் கரடிகள் அனைத்துண்ணிகளாக உள்ளன.

உயிரின அறிவியலாளர் கரடியினத்தை ஊர்சிடே (Ursidae) என்னும் பெரும் பிரிவில் காட்டுவர். ஊர்சஸ் (Ursus) என்றால் இலத்தீன் மொழியில் கரடி என்று பொருள். இதன் அடிப்படையில் ஊர்சிடே என்பது இவ்வினத்தைக் குறித்தது.

இந்த ஊர்சிடேயின் உட்பிரிவில் ஐந்தே ஐந்து இனங்கள் தாம் உள்ளன. அவற்றுள் நான்கினுடைய உட்பிரிவில் ஒவ்வொன்றுக்கும் ஒரு வகைதான் உள்ளன.

ஆபிரிக்கக் கண்டத்திலும், ஆஸ்திரேலியாவிலும் கரடிகள் இல்லை. தென் அமெரிக்காவின் வட பகுதியில் மட்டும் சிறு நிலப்பரப்பிலே சில வகைக் கரடிகள் வாழ்கின்றன.

கரடிகள் நல்ல மோப்பத் திறனும் கேட்கும் திறனும் கொண்டவை; உடலில் அதிக முடிகளைக் கொண்டுள்ளன. மேலும் இவை இரண்டு கால்களினால் நிற்க வல்லவை.

பனிக்கரடி (துருவக் கரடி, Polar bear) நில உருண்டையின் கடும் உறைபனி சூழ்ந்த ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் வெண்ணிறக் கரடி இனமாகும். ஆர்ட்டிக்கு மாக்கடல் என்று இந்த உறைபனிப் பகுதியைக் கூறுவதால், இக்கரடியை வெண் கடற்கரடி என்றும் கூறுவதுண்டு.

இது இறைச்சி உண்ணும் ஊனுண்ணிப்பாலூட்டி. இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாடவல்லது. இவற்றின் முதன்மையான உணவு சீல் ஆகும்.

வளர்ந்த ஆண் கரடி 400 முதல் 600 கிலோக்கிராம் எடையுடையது. பெண் கரடிகள் 200 முதல் 300 கிலோக்கிராம் எடையுடையவை.

இவை இளவேனிற் (வசந்த) காலத்தில் கருத்தரிக்கின்றன. இவற்றின் கருவுற்றிருக்கும் காலம் 240 நாள்களாகும். பொதுவாக இரண்டு குட்டிகள் பிறக்கின்றன. உலகில் ஏறத்தாழ 20000 பனிக் கரடிகள் உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு இயற்கையான வாழிட எதிரிகள் ஏதும் இல்லை (மனிதரைத் தவிர). கடுங்குளிர்ப்பகுதியாகிய ஆர்ட்டிக் நிலத்தில் வாழ முற்றிலும் பழக்கப்பட்டது.

இனப்பெருக்கக் காலங்களில் பெண் கரடியுடனும், குட்டிகளுடனும் இருந்தாலும், பனிக்கரடிகள் பொதுவாக த்தனியாக வாழும் விலங்குகள். பெரும் திமிங்கிலமோ, அல்லது பெரிய மிருகங்களோ உண்ணக் கிடைக்கும் பொழுது 20-30 கரடிகள் போல ஒரே இடத்தில் பார்க்கலாம். இவை ஏறத்தாழ 20-25 ஆண்டுகள் வாழும்.

## கரடி வகைகள்

*பனிக்கரடி *கொடுங்கரடி *அமெரிக்கக் கருங்கரடி

*வெண்கண்வளையக் கரடி. இரு கண்களைச் சுற்றியும் இரு வெள்ளையான வளையம் இருப்பதால் இதனை மூக்குக்கண்ணாடிக் கரடி என்றும் அழைப்பர்.

*அசையாக்கரடி சுலாத்துக் கரடி (Sloth bear)

*ஆசியக் கருங்கரடி

*மலேயக் குறுங்கரடி (யாவற்றிலும் சிறிய கரடி)

சுவாதி, கொழும்புத்துறை.

## யாழ் விலைவாசியும்

ஐயகோ!
எந்தன் வீட்டு
அடுப்பங்கரையை
எட்டிப் பாருங்கள்
பற்றி எரிகிறது
அடுப்பல்ல......
வயிறு.
நாடும் தூங்க
நீயும் நானும்
தூங்கிவிட
நடுநிசிதனில்
நாளொருபொழுதாய்
விலையேற்றம்
வாழ்வது எப்போ?
மீள்வது எப்படி
விரக்தி நித்தமும்
என்னை.....
துரத்துகிறது.....
தீப்பெட்டி முதல்
சவப்பெட்டி வரை
விலைவாசியானதால்
செத்துப் போகவும்
முடியவில்லை.

எஸ்.கவிதரன்,
சண்டிலிப்பாய்.

## ஞாபக மறதி மேதை

ஒரு முறை தோமஸ் அல்வா எடிசன் வரி கட்டுவதற்காக அதற்குரிய அலுவலகம் சென்றிருந்தார். அங்குள்ள அலுவலர் எடிசனிடம், "உமது பெயர் என்ன?" என்று கேட்டார்.

உடனே எடிசனால் இதற்குப் பதில் அளிக்க முடியவில்லை. காரணம் என்ன தெரியுமா? தன் பெயர் என்ன என்பது அவருக்கு நினைவே இல்லாதது தான்.

நல்ல காலமாக அச்சமயம் அவரது நண்பர் அங்கே வந்து சேர்ந்தார். அவர் எடிசனைக் கண்டதும், "என்ன எடிசன், நலமாக இருக்கிறீர்களா?" என்று நலம் விசாரித்தார். அப்போதுதான் எடிசனுக்குத் தன் பெயர் நினைவுக்கு வந்தது. உடனே தானே தன் பெயரை அறிவித்தாராம்.

இன்னொரு முறை அவர் தம் மனைவியோடு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். குறிப்பிட்ட இடம் வந்ததும் தம் மனைவியையும் இறங்கச் சொல்ல வேண்டுமே என்ற எண்ணமேயின்றித் தாம் மட்டும் இறங்கி விட்டார்.

# தலைமுடி உதிர்வதற்குத் தீர்வு



முடி உதிர்தல் குறிப்பாக தலை மயிர் உதிர்ந்ததன் பின்னர் அதனை மீள சரி செய்வது தொடர்பில் சுவிஸ் விஞ்ஞானிகள் புதிய ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

உரோமம் குறைந்த நாய்களைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் முடி உதிர்விற்கு சிறந்த தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என குறித்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். குறித்த நாய்களின் டி.என்.ஏ மாதிரிகளைப் பல கோணங்களில் ஆய்வு செய்ததன் பின்னர் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உரோமம் குறைந்த நாய் இனங்களைக் கொண்டு வழுக்கைத் தலைக்கு மருந்து கண்டுபிடிக்க முடியும் என சுவிஸ் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே உரோமம் குறைந்த நாய்கள் உலகில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உரோமமற்ற நாய்களின் கலங்களையும், மனித கலங்களையும் தீவிரமாக ஆராய்ந்ததன் பின்னரே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் முடி உதிர்ந்தோர் குறித்த மருத்துவ சிகிச்சையின் மூலம் மீண்டும் தலை மயிரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணன், ஆனைக்கோட்டை.

*பறவை இனங்களில் ஆந்தையின் முட்டை மாத்திரமே உருண்டை வடிவில் இருக்கும்.
*இரவு வேளைகளிலும் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரங்கள் துளசியும் அரசமரமும் தான்.
*இலங்கையில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டு 2003 நவம்பரில் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தில் பதிவாகி விற்பனைக்கு வந்த கார் மைக்கரோ ஆகும்.
*முதலையின் அடி வயிற்றுப் பகுதி தோலில் "புல்லட் புருப்" உடை தயாரிக்கிறார்களாம்.
*உலகில் அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உள்ள நாடு இந்தோனினேசியா.
*பல பாடல்களைப் படைத்த பாரதியார் தாலாட்டுப் பாடல்களைப் பாடவே இல்லை.
*93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனையாகி புத்தக உலகில் சாதனை படைத்த "ஹரிபொட்டர்" புத்தகத்தை எழுதியவர் இங்கிலாந்துப் பெண் எழுத்தாளர் ஜே.கே. ரவுலிங் ஆகும்.

# வேறு சூரிய குடும்பங்களும் பிரபஞ்சத்தில் உண்டா?

பறக்கும் தட்டுகள் பற்றி அவ்வப்போது கேள்விப்படுகின்றோம் அல்லவா? இது ஏனென்றால் நாம் இருக்கும் உலகத்தைத் தவிர வேறு உலகங்களும் உண்டு- அங்கும் வேறுவிதமான மனிதர்கள் அல்லது உயிரினங்கள் வாழக்கூடும் என்றெல்லாம் மனிதர்கள் நம்புவதுதான் காரணம். இவ்வாறு ஒரு நம்பிக்கை ஏற்படுவதற்கு நமது சூரிய குடும்பமானது மிகப் பெரிய பிரபஞ்சத்தின் ஒரு சிறு பகுதியாக இருப்பதே காரணமாகும்.

விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை எமது சூரிய குடும்பத்தைப் போன்ற லட்சக்கணக்கான வேறு சூரிய குடும்பங்கள் பிரபஞ்சத்தில் உண்டு என்று கருதுகிறார்கள்.

சூரிய குடும்பத்தில் ஒரு சூரியனும் அதனைச் சுற்றி இருக்கும் ஏனைய பொருள்களுமாம். எமது சூரிய குடும்பத்திலுள்ள கிரகங்கள், சந்திரன்கள், எரிகற்கள், வால் நட்சத்திரங்கள் யாவும் சூரியனின் ஈர்ப்புச் சக்தியினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எமது பூமியும் கிரகங்களில் ஒன்றுதான். கிரகங்கள் அளவிலும் அவை இருக்கும் இடைவெளிகளிலும் மிகமிக வித்தியாசப்படுகின்றன. புதன் (மேர்க்கூரி) மிகச்சிறிய கிரகம் அத்துடன் அதுவே சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம்.

புதன்கிரகமானது 88 நாள்களில் சூரியனைச்சுற்றி வந்துவிடுகின்றது. வெள்ளியானது (வீனஸ்) சூரியனிலிருந்து 68 மில்லியன் மைல் தொலைவில் இருக்கின்றது. 225 நாள்களில் சூரியனைச் சுற்றி வருகின்றது. நமது பூமி சூரியனிலிருந்து 93 மில்லியன் மைல் தூரத்தில் இருக்கின்றது. செவ்வாய்க்கிரகம் சூரியனிலிருந்து 142 மில்லியன் மைல் தூரத்தில் 687 நாள்களில் அதனைச் சுற்றி வருகின்றது.

வியாழக்கிரகமானது சூரியனிலிருந்து 483 மில்லியன் மைல் தூரத்தில் இருக்கின்றது. 12 ஆண்டுகள் பிடிக்கும் சூரியனை அது சுற்றுவதற்கு. சனிக்கிரகம் சூரியனிலிருந்து 886 மில்லியன் மைல் தூரத்தில் இருக்கிறது. சூரியனை அது ஒரு முறை சுற்றி வருவதற்கு 29 1/2 ஆண்டுகள் பிடிக்கும். நெப்டியூன் என்ற கிரகத்துக்கு 165 வருடங்கள் எடுக்கும் சூரியனைச் சுற்றி வருவதற்கு.

இவ்வாறு நமது சூரிய குடும்பத்தில் வெவ்வேறு விதமான கிரகங்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சூழ்நிலைகளில் காணப்படுகின்றன. இவ்வாறான சூரிய குடும்பங்கள் வேறும் பிரபஞ்சத்தில் இருக்கலாம்- அவைகளில் எங்கோ மனிதர்களைப் போன்ற அல்லது அவர்களைவிட அறிவில் கூடிய உயிரினங்கள் இருக்கலாம் என்ற ஊகம் இருந்து வருகின்றது.

அஜீ, இருபாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் மென்பந்துக் கிரிக்கெற் சுற்றுப்போட்டி

அமரர் ந.ஜெயந்திலகன் (நிர்வாக உத்தியோகத்தர் இலங்கை வங்கி) ஞாபகார்த்தமாக திருநெல்வேலி Y.M.H.A அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 6 பேர்கொண்ட 6 ஓவர் மென்பந்துக் கிரிக்கெற் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது. விண்ணப்பப் படிவங்களை New Power World, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 12.10.2008

விளம்பர அனுசரணை:
**New Power World Sports Centre**
All kind of sports items
Thirunelvely junction, Thirunelvely.
Phone: 021-222 7013

## தங்கம் ரூ.24000 ஆனால் தங்கமெடலோ ரூ.300....!



உலக ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களை கௌரவிக்க, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்க தங்க மெடல் ஒன்றை வழங்குங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**
212, கோயில் வீதி, நல்லூர்.
021 222 9607, 0777-110610
(சி/554690)

## வட.இ.ச.சபைப் பரீட்சைகள் - 2009

வட.இ.ச.சபையின் 2009 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் 03.10.2008 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி (01.12.2008) விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா (முப்பது) 30/- மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 45/- பெறுமதியான காசுக்கட்டளையை (மணிஓடர்) உடன் சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்
**வட இலங்கைச் சங்கீத சபை,**
**யாழ்.வலயக் கல்வி அலுவலகம்,**
*செம்மணி வீதி, யாழ்ப்பாணம்*
*எனும் இடத்தில் பெற்றுக் கொள்ளவும்.*
(சி/554786)

## கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர்
திருமதி சாந்தினி அருளானந்தம்
அவர்களின் அன்புத் தந்தை

**எம்.என்.கந்தசாமி**

அவர்கள் காலமான செய்திகேட்டு துயருறுகின்றோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்,
இல்லச்சிறார்கள்.

**சைவவித்தியா விருத்திச் சங்கம்,**
*கலாசாலை வீதி, திருநெல்வேலி.*
(சி/554913)

## சிவிலியன் மரணம்

பொலநறுவை, மெதிகிரிய, பங்கரான பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஊர்காவற் படையினருக்கும் சிவிலியன்களுக்கு மிடையில் இடம்பெற்ற மோதலில் சிவிலியன் ஒருவர் உயிரிழந்தார். ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவரும் பெண் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் பொலநறுவை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(அ-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் பிரம்மஸ்ரீ
கு.சரவணபவக்குருக்கள் - நிரஜா
தம்பதியரின் புதல்வன்
**ச.சாத்வீகசர்மா** (115 புள்ளிகள்)
(யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)



கொக்குவில் பிரம்மஸ்ரீ
உ.மாகதசர்மா - ரஜனி
தம்பதியரின் புதல்வி
**உ.மாதவி** (143 புள்ளிகள்)
(யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

2008 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல வெற்றிகளைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பிரம்மஸ்ரீ செ.பரமானந்தக் குருக்கள் *(கல்வயல்)*,
மற்றும் பிள்ளைகள், குடும்பத்தினர்.
(78884)

## பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சிறுவர்கள் தினத்தையொட்டிய நிகழ்வு

இடம்:- சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்
திகதி:- நாளை (02.10.2008) வியாழக்கிழமை
நேரம்:- காலை 9.30 மணி

*சிறுவர்களுக்கு பசுப்பால் வழங்கப்படும்.*

பிரதமவிருந்தினர்:-
திரு.எஸ்.ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலாளர், சாவகச்சேரி)

**செயலாளர்,**
**ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.**

## வீடு விற்பனைக்கு

மாட்டின் லேனில் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: N. **இந்திராதேவி**
NO.10A *மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.*
T.P. 077 4805104, 021 222 5278, 021 222 5544

## காணி விற்பனைக்கு

*மானிப்பாய் வேலக்கைப் பிள்ளை யார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப் புக்காணி விற்பனைக்குண்டு.*
*தொடர்புகளுக்கு: 021 4591438, 077 6916929*

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.1

கட்டாயக் கல்வி மற்றும் விசேட கல்வி தொடர்பான தீவக வலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீவக வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

* * *

கட்டாயக் கல்வி தொடர்பில் வடமராட்சி அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வ-து

## பெயர் மாற்றம்

இதுவரை காலமும் "வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைச் சங்கம் (வ.து) என இயங்கி வந்த மேற்படி சங்கம் இன்று (01.10.2008) முதல் **"வலி.கிழக்கு வாழைக் குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் - (வ.து)"** என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

**சி.சுந்தரலிங்கம்** *(தலைவர்).* (78857) **சி.திருநாவுக்கரசு** *(உப செயலாளர்).*

## பகிரங்க ஏல விற்பனை - 2008 மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகத்தினால் பாவிக்கப்பட்ட தற்போது பாவனையில் இல்லாத பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. பொருள்களின் விவரம் பின்வருமாறு

| |
|---|
| கூரை மரங்கள் |
| மர அலுமாரி |
| பாவித்த கூரைத் தகடுகள் |
| பாவித்த சீலிங் சீற்றுக்கள் |
| கல்வனைஸ் பைப் கேற் |
| பாவித்த இரும்புப் பொருள்கள் |
| மர தீராந்திகள் |
| பிறைவூட் பலகை |
| இரும்புக் கம்பி வலை |
| பிளைவூட் கதவு இரும்பு பிறேம் |
| பிளைவூட் கதவு அலுமீனியம் பிறேம் |
| பாவித்த வாகன ரயர்கள் |
| பாவித்த வாகன பற்றறிகள் |
| பாவித்த எண்ணெய் பரல்கள் |
| கணனி அச்சு இயந்திரங்கள் |
| UPS (இடையறா மின் வழங்கி) |
| கணனிகள் |
| போட்டோ பிரதி இயந்திரங்கள் |
| தொலை நகல் |
| தொலைபேசி ரிசீவர்கள் |
| கூரைக்காற்றாடிகள் |

மேற்படி பொருள்களின் ஏல விற்பனையானது 16.10.2008 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் ஏலவிற்பனையில் பொருள்களை கொள்வனவு செய்ய விரும்புபவர் மாவட்டச் செயலகத்தின் நலன்புரிக் கிளையுடன் தொடர்பு கொண்டு அலுவலக நாள்களில் 01.10.2008 முதல் 15.10.2008 வரை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருள்களைப் பெறுபவர்கள் உடனடியாக முழுப் பணத்தொகையையும் மாவட்டச் செயலக காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டு பொது 172 ஐப் பெற்று அன்று மாலை 4.30 க்குப் பிந்தாமல் பொருள்களை மாவட்டச் செயலகத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.

**கே.கணேஷ்**
அரச அதிபரும் , மாவட்டச் செயலாளரும்
*யாழ்ப்பாண மாவட்டம்.*
(சி/554912)

## ஐந்தாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



**அமரர் கிறிஸ்ரியன் ஸ்ரனிஸ் ஜெயகாந்தன் B.A.**
(ஆசிரியர், இலுப்பைக் கடவை அ.த.க.பாடசாலை)

தோற்றம் 06.09.1974
மறைவு 01.10.2003

போய் வருவேன் என்றுரைத்துப் போனீரே போனீரே மீண்டும் வரவில்லை
தாயோடு தாதையும் நம் சோதரியும் தாளாது தவிக்கின்றோம்; தனித்தவராய்
ஐப்பசியின் முதல் நாளில் இப்படியோர் அமங்கலந்தான் அமையுமென்று அறிந்தோம் இல்லை
எப்படித்தான் காலன் உம்மை வழி மறித்தான் ஏனைய்யா விதி வரைந்த வழி சென்றீர்
ஆண்டைந்து ஆனதையா நாம் கணக்கில் ஈண்டிங்கு நம் நினைவு யுகக் கணக்கில்
விழிநீரில் பெருக்கெடுக்கும் கடல் தனையே காணிக்கை யாக்குகின்றோம் ஏற்பீரே!

*இல.03, சென்.ஆன்ஸ்*
*இரண்டாம் ஒழுங்கை,*
*பாண்டியன் தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.* (78813)

**குடும்பத்தினர்.**

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

A/L 2008 கணக்கியல்துறை மாணவர்களிற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட
கணக்கியல் துறையில் வேலைவாய்ப்புக்களை அதிகம் கொண்ட ஒரே கற்கைநெறி!


**DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING**

**QUICK BOOK ACCPAC MYOB TALLY**

உலகின் முன்னணி கணக்கியல் மென்பொதிகளூடாக தமிழ்மொழி விளக்கத்துடன் நிதிக்கணக்கீடு கிரயக்கணக்கீடு முகாமைக்கணக்கீடு இருப்புக்கட்டுப்பாடு வரி (VAT) வங்கிஇணக்ககூற்று..... அனைத்தையும் உள்ளடக்கி கற்பிக்கப்படும்..

ஆரம்பம்: Batch I : 02/10/2008, Batch II : 07/10/2008 } 10.00AM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கும் அராலி இந்துக்கல்லூரிக்கும் இடையேயான 16 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் இரு அணிகளும் மோதிக்கொள்ளும் முக்கிய காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# சங்கானை கோட்ட உதைபந்தாட்ட இறுதியாட்டம் அபாரமாக துடுப்பாடிச் சாதித்தது அராலி இந்து



வலி.வடக்கு,ஒக்.1

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அராலி இந்துக் கல்லூரி சங்கானை கல்விக் கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயமும் அராலி இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டது. சுமார் பத்து நிமிடத்தில் தம்மைச் சுதாகரித்துக்கொண்ட சரஸ்வதி மகாவித்தியாலயமும் சமனான நிலையில் விளையாடத் தொ[illegible]ங்கியதும் போட்டி மிகவும் விறுவிறுப்[illegible]ந்தது.

இரு அணிகளும் மாறி மாறி எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கிப் பந்துகளை நகர்த்தி சென்றபோதிலும் இரு அணிகளின் கோல்கள் பெறும் முயற்சியை பின்னணி வீரர்களும் கோல் காப்பாளர்களும் தடுத்து நிறுத்தினார்கள்.

முதல்பாதி ஆட்டம் இரு அணிகளினதும் கோல்கள் பெறும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து கோல்கள் அற்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் இரு அணிகளும் எப்படியும் கோல்கள் பெறவேண்டும் என்ற உத்வேகத்துடன் மோதிக்கொண்டன. இரு அணியினரும் மிகவும் வேகமாக மாறி மாறி எதிரணியினரின் கோல் கம்பங்களை நோக்கிப் பந்தை நகர்த்தினார்கள்.

போட்டியின் 12ஆவது நிமிடத்தில் அராலி இந்துக் கல்லூரி வீரன் கஜேந்திரன் பின்னணி வீரன் அடித்த பந்து ஒன்றைப் பெற்று மிகவும் விரைவாக முன்நகர்த்தி எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கி வேகமாக அடித்தார்.

கோல்காப்பாளர் தடுக்க முற்பட்டபோதிலும் அதனைக் கோல் காப்பாளரினால் தடுக்கமுடியாத வண்ணம் உயர்ந்து கோல் கம்பத்தினுள் சென்று அராலி இந்துக் கல்லூரி முதலாவது கோலைப் பெற்று முன்னணியில் நின்றது.

தொடர்ந்தும் இரு அணிகளும் கோல்கள் பெற பெரு முயற்சி எடுத்தபோதிலும் அது கைகூடவில்லை. போட்டியின் இறுதியில் அராலி இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்றுக் கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (1-86)

## புளியங்கூடலில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.1

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் நடத்தும் மகாமாரி முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

திருமதி சா.அமுதினி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் எஸ். கணேசானந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளிடையே விறுவிறுப்பாக இடம்பெறும் உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஒக்.1

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் விறுவிறுப்பாக இடம்பெற்று வருகின்றன.

இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-

14 வயதுப் பிரிவு

* இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரிக்கும், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.
* பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்திற்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை 2:0 என்ற கோல் கணக்கில் கலைமகள் வித்தியாலயத்தை வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு

* இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரிக்கும் சுதுமலை சிந்மய பாரதி மகா வித்தியாலயத்திற்கும் இடையே இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி 7:0 என்ற கோல் கணக்கில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தை அபாரமாக வென்றது.
* பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்திற்கும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டி ஒன்றில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் கலைமகள் வித்தியாலயத்தை வெற்றிபெற்றது.
* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி 6:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையை இலகுவாக வென்றது.

18 வயதுப் பிரிவு

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி 6:0 என்ற கோல் கணக்கில் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையை வெற்றிபெற்றது.
* மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 3:2 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக்கல்லூரியை வெற்றிபெற்றது. (1-86)

# யாழ்.பாடசாலைகளுக்கு இடையே முதல்முறையாக 20/20 சுற்றுப்போட்டி

வலி.வடக்கு,ஒக்.1

யாழ்ப்பாணம் பாடசாலைகளுக்கு இடையே முதல்தடவையாக இருபது இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இந்தவார இறுதியில் இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணப்-பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட அணிகள் மோதவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியன பங்குபற்றவிருக்கின்றன.

முதல்தடவையாக இப்போட்டி யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெறுகின்றமையை பாடசாலை அணிகளும் கிரிக்கெட் ரசிகர்களும் பெரிதும் வரவேற்றுள்ளார்கள். (1-86)

# தெல்லிப்பழை ஆரம்பப் பிரிவு தாச்சி; பன்னாலை கனகசபை சம்பியனானது

வலி.வடக்கு,ஒக்.1

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட அம்பனை குடும்பப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற ஆரம்பப் பிரிவு ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயமும் அளவெட்டி சீனன்கலட்டி அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

ஆரம்பப்பிரிவு மாணவர்களாக இருந்த போதிலும் இரு அணியினரும் மிகவும் சிறந்த முறையில் விளையாடி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுக்கொண்டார்கள்.

போட்டி நிறைவில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் 3:2 என்ற பழக் கணக்கில் அளவெட்டி சீனன்கலட்டி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையை வெற்றி பெற்றது.

இந்த இரு பாடசாலைகளும் கோட்ட மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

# முன்பள்ளி விளையாட்டு விழாக்களின் பதிவுகள்...



தென்புலோலி சிங்கைநகர் உதயசூரியன் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பரிசில் வழங்கும்போது... (218)



சங்குவேலி ஸ்ரீ அம்பாள் முன்பள்ளி, சங்குவேலி விநாயகர் முன் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் முன் பள்ளிச் சிறார்களின் ஓட்டப்போட்டியின்போது... (படம்: நேசன்)



கோண்டாவில் ஸ்ரீ விக்னேஸ்வரா ஞானக்குழந்தை இல்லத்தின் பாலர் விளையாட்டு விழாவின்போது பங்குகொண்ட குழந்தைகளும் ஆசிரியைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

செல்வன்

**இராம.பாலச்சந்திரக்குருக்கள் வித்தியாதர சர்மா**

அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் கல்வியில் மேன்மேலும் உயர இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகரை வேண்டி நிற்பதுடன், அவரது வெற்றிக்கு வழிகோலிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயிலடி, இளவாலை.

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அண்ணாமார், தம்பி, அக்கா, பாட்டிமார், மாமாமார், மாமிமார் மற்றும் உறவினர்கள்.

(78878)



உ
சிவமயம்

# அறிவித்தல்

**காரைநகர் சிவன்கோயில் திருப்பணிகள் பற்றி காரைநகர் பொதுமக்களின் ஆலோசனைக் கூட்டம்**

**இடம்: கொழும்பு தமிழ்ச்சங்க கட்டடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள மண்டபம்**
இல. 7, 57ஆவது ஒழுங்கை
(உருத்திரா மாவத்தையின் தொடர்ச்சி) வெள்ளவத்தை, கொழும்பு-06.

**காலம்: 05.10.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு**

எங்கள் காரைநகர் சிவன்கோயிலின் திருப்பணி நிலைமை பற்றி காரைநகர் பொதுமக்களின் ஆலோசனைக் கூட்டமொன்று 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறும். காரைநகர் சைவப் பெருமக்கள் அனைவரையும் திரண்டு வந்து ஆலோசனை வழங்கி ஆவனசெய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

6B,டெய்சிவில்லா அவனியு, கொழும்பு-04.

செயலாளர்
காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபை
அழைப்பாளர்கள்.

(சி/554882)



# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**கந்தசாமி பாலசவுந்தரி**

மலர்வு: 22.03.1938
உதிர்வு: 16.10.2004
திதி: துதியை (01.10.2008)



எங்கள் ஆசை அம்மாவே!
எமை அரவணைத்த தெய்வமே!
எங்கள் குல தெய்வமே!
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் உறவுகள் நாம்
மோட்ச இன்பத்தில் மூழ்கிய நினைவுடன்
நான்கு ஆண்டுகளாக வாடுகின்றோம்.

'புதிய செம்மணி வீதி',
வயல் வெளிக் கந்தசுவாமி
கோயில் வீதி, கல்வியங்காடு.

பிரிவால் வாடும்:
சேயோன் (மகன்), ஸ்ரீதேவி (மருமகள்), அஜந்தன் (பேரன்).

(78876)


# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

கடந்த மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிய முடிவுகள் வருமாறு:-

**ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை**
பாஸ்கரன் மாதங்கி (136).

**அருணோதயக் கல்லூரி**
சே.ஸ்ரெலின்ராஜ் (152), ஜெ.பிரியங்கன் (142), ம.ஸ்ரீரங்கன் (137), சி.நிரோஜினி (125), ச.டனுசியா (121), யு.டிலக்ஷன் (117), சி.யதுர்ஷன் (115).

கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலை
ர.சதூஷா (141), க.நிந்துஜா (120).

யா/துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை
சி.சிந்துஜன் (142).

## இராச வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்குச் சேதமடைந்து காணப்பட்ட இராசவீதியின் புனரமைப்பு வேலைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வீதியின் அவலநிலை குறித்து 'உதயன்' பல தடவைகள் செய்திகளை வெளியிட்டமையை அடுத்து திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் பயணம் செய்யும் இந்த வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு குன்றும் குழியுமாக காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. (203-224)

## காலங்கடந்த பதிவுகளை மேற்கொள்ள கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை

கரவெட்டி, ஒக். 1

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாதோர் இந்த நடமாடும் சேவையில் தங்களிடம் உள்ள ஆவணங்களுடன் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாமையாலேயே தேசிய அடையாள அட்டைகள் பெறமுடியாதுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து நடமாடும் சேவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. (203-70)

## சாவகச்சேரி சிறுவர் கழகத்தின் சிறுவர்தின நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 1

சாவகச்சேரி சிறுவர்கழகம் சிறுவர் தினத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பாடசாலையில் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளில் தென்மராட்சிப் பிரதேச சிறுவர் கழக உத்தியோகத்தர் மு.மாதங்கி, சாவகச்சேரி நகர கிராம சேவையாளர் வி.சிவசரணநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் சாவகச்சேரி நகர் சமூர்த்தி வங்கி உத்தியோகத்தர் எஸ்.செந்தூரன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வை.இராஜரட்ணம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி க.அருந்தராஜா மற்றும் சிறுவர் கழக ஆலோசனை உறுப்பினர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (203)


# அருட்பணி வாழ்வில் வெள்ளிவிழா நாயகன்

01.10.2008

அருட்தந்தை **பொன் பொஸ்கோ** (செ.தா)



அருட்பணி வாழ்வில் 25 ஆண்டுகள் ஆண்டவனுக்குத் தொண்டாற்றி இன்று வெள்ளிவிழாக் காணும்

அருட்தந்தை
பிலிப்பு ஸ்ரனிஸ்லோஸ் டொன் பொஸ்கோ (செ.தா)

அடிகளார் அவர்களை, பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்தி, தொடர்ந்தும் இறைபணியை இனிதே நிறைவேற்ற தேவ ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

புனித அந்தோனியார் கோயிலடி, நாவற்குழி, கைதடி.

அன்புடன்:
**அண்ணா குடும்பத்தினர்**
**போ.நிக்கிலாஸ்.**

(78872)



# விற்பனைக்கு

**ஓடுகள், பாலை தீராந்தி வகைகள்**

பாலைத் தீராந்திகள், ஆலயத்தின் தேவைகளுக்கான தேர்ச் சப்பறம் ஊசிக்கால் தேவைகளுக்கும் பாவிக்கக்கூடிய கனம் 7/4, 6/4 சைஸ்களில் இருந்து நீளம் கூடியதும் குறைந்ததுமான அளவுகளில் உண்டு. வீட்டுத் தேவைகளுக்கும் நிலைகளுக்கும் கீறிப் பாவிக்கலாம்.

**இதனைப் பார்வையிட விரும்புவோர்:**

* 02.10.2008 வியாழக்கிழமைக்கு இடையில் பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உ.ப.அலுவலக எல்லைக்குட்பட்ட மந்திகை மரக் கறிச்சந்தையின் கட்டடத்தில் பார்வையிடலாம்.
* போனில் தொடர்புகொள்ள விரும்பினால் ஈஸ்வரன் தொலைத் தொடர்பகம் வல்வெட்டித்துறை T.P. No: 0212263547 இதற்கு உங்கள் நம்பரை தெரியப்படுத்தினால் பின்பு கதிர்காமலிங்கம் என்பவர் தொடர்புகொள்வார்.

நேரிலும் கடிதத்திலும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**செ.கதிர்காமலிங்கம், அ.மி.பாடசாலை வீதி,வல்வெட்டித்துறை.**

02.10.2008 அதன்பின் பொருள்களை பார்வையிடும்
விலாசம்: மா.தங்கவேல்
(மீரா லாண்ட் மாஸ்டர் உரிமையாளர்)
போடிங் றோட், பருத்தித்துறை.

(78832)



# 28ஆவது பிறந்த தினமும் நீங்காத நினைவுகளும்



அமரர்
**கனகரெத்தினம் சுரேஸ்குமார்**

தாயின் மடியில்
01.10.1980
ஆண்டவன் அடியில்
04.03.2007

என்றும் புன்னகை பூத்த செல்வமே- சுரேஸ்குட்டி
எவருக்கும் கள்ளமில்லா நெஞ்சமே!
என்றும் புன்சிரிப்புடன் தவழ்ந்நீரே!
எங்கள் ஆயுள் உள்ளவரை
உம்மை நாம் மறவோம்.

இல.46, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(78860)



# இருபத்திரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் அருணாசலம் கந்தசாமி**
(முன்னாள் அதிபர், முன்னாள் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் உடுவிற் பகுதி)

திதி: துதியை (01.10.2008)

பரிவான புன்னகையில் எம்மனதில் நிலவொளிக்கும்
பேசும் மொழியினிலே எவர் மனதும் வெற்றெடுக்கும்
ஒளி சிந்தும் ஆதவனாய் நல்ல வழி காட்டியதால்
அவ்வழியே வாழ்கின்றோம் இமைப் பொழுதும் உமை மறவோம்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

பாச நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**

(78880)



# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

**A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.**

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008** 80% off

| Course | Fee | Duration |
|---|---|---|
| Diploma in Computer Science | 2,150 | 4 Months |
| Honours Dip in Computer Science | 2,600 | 5 Months |
| Diploma in Web page Designing | 2,150 | 4 Months |
| Diploma in Graphic Designing | 2,150 | 4 Months |
| Diploma in Desktop Publishing | 2,000 | 4 Months |
| Dip in Hardware Engineering | 2,000 | 3 Months |
| Diploma in Microsoft Office | 1,500 | 3 Months |
| Dip in Auto CAD | 2,000 | 3 Months |
| Accounting Package | 2,150 | 2 Months |

50% OFF

| Course | Old fee | Fee |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |
| Diploma in Networking | ~~10,000~~ | 5,000 |

ஆரம்பம் :
Batch I: 03/10/2008 09AM 02PM
Batch II: 04/10/2008 11AM 02PM
Batch III: 05/10/2008 11AM 02PM
Batch IV: ...

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் பொருத்தமான கற்கை நெறியை தேர்ந்தெடுத்து விடுமுறைகாலத்தை பயனுடையதாக்கிக்கொள்ளுங்கள்.

---- 25ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# தமிழ் மக்களின் நடமாடும் உரிமை...?...!

கொழும்பு தொடக்கம் காலி வ்ரையான வீதியில்- கொழும்பு - காலி வீதியில் - பொதுமக்களின் போக்கு வரத்துக்கு இடையூறாக உள்ள சோதனைச் சாவடிகள் மற்றும் வீதி மறிப்புகள் உட்பட அனைத்துத் தடைகளையும் அகற்ற வேண்டும்.

இவ்வாறு உயர்நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தர விட்டிருக்கிறது.

வீதித்தடைகள், சோதனைச் சாவடிகள் பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு இடையூறாக உள்ளதால் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு இடையூறு விளைவிக்கின்றன. ஆகையால் அவற்றை நீக்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ளது.

போக்குவரத்துத் தடைகளை நீக்குவதற்கு எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பொலிஸாருக்குக் காலக்கெடுவும் விதித்திருக்கிறது உயர்நீதிமன்றம்.

காலி வீதியில் தலைநகர் கொழும்பிலிருந்து காலி வரை பொலிஸார் இராணுவத்துடன் சேர்ந்து அமைத்துள்ள போக்குவரத்துத் தடைகளை, சோதனை நிலையங்களை அகற்றுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிடுவது இது முதல் முறையல்ல.

ஏற்கனவே தொடரப்பட்ட மனித உரிமைமீறல் வழக்கில் இதே உத்தரவு சில மாதங்களுக்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் பொலிஸார் அந்த உத்தரவை மதித்து நடக்கவில்லை. போக்குவரத்துத் தடைகள் நீக்கப்படவில்லை. இது குறித்து இப் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

முந்திய வழக்கைத் தாக்கல் செய்த தரப்பினர் பொலிஸாரின் செயல் இன்மையை நீதிமன்றத்துக்கு இப்போது சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே நீதிமன்றம் கால அவகாசம் விதித்து மீண்டும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில், பாதுகாப்புத் தரப்பினதும் சிவில் நிர்வாகத்தைப் பேணிப்பாதுகாக்கும் பொலிஸாரினதும் போக்கு, மக்களுடைய உரிமைகளுக்கு மதிப்பளிக்காத இறுமாப்புத் தனத்தை இந்த வழக்கு வெளிப்படையாக்கி உள்ளது.

பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி, எதையும் எப்படியும் எதேச்சாதிகாரமாகச் செய்யும் அதிகாரம் தமக்கு இருப்பதாகப் பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் கருதுகின்றனர். அவர்கள் சட்டத்தையும் நீதியையும் தமது கைக்குள் போடுவது இலங்கையில் ஒன்றும் புதியதல்ல. ஏனெனில் ஆட்சியில் உள்ளவர்கள், நீண்ட காலமாகவே எல்லா வகைகளிலும் அவர்களுக்குப் பக்கத்துணையாக இருக்கிறார்கள் என்பதாலாகும்.

வடக்கு மாகாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து தங்கியிருப்பவர்களால் பாதுகாப்பு ஆபத்து மறைமுகமாக உருவாகிறது என்று "காரணம்" காட்டி அரசாங்க உயர் பீடத்தில் உள்ளவர்கள் தமிழர்களை இரண்டாம் தரப் பிரசைகளாக்கி பதிவுசெய்ய உத்தரவிட்டார்கள் என்றால்-

பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் மனித உரிமைகள் குறித்து அக்கறை காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பது எவ்வாறு?

நாட்டின் பிரசைகளின் மனித உரிமைகளைவிட பாதுகாப்புக்கும் அது சார்ந்த நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வழமை இந்த நாட்டில் எழுதப்பட்ட விதியா அல்லது எழுதப்படாத பெரும்போக்குத்தனமா என்பது இப்போது சர்ச்சைக்குரிய ஒன்றல்ல. அதுவும் தமிழர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில், தமிழ்ப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படை மனித உரிமைகள் தூசாக மதிக்கப்படுவது நடைமுறையில் சேர்க்கப்பட்டுவிட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு என்பதே தேவமொழியாகக் கருதப்பட்டு, அதற்கே முன்னுரிமையும் முதலுரிமையும் வழங்கப்படுகிறது. பாதுகாப்பு என்ற சொல்லை வைத்து தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும் வாழ்வாதார உரிமைகளையும் தங்குதடையின்றி மீறலாம், பறிக்கலாம் என்ற எழுதப்படாத விதி மேலோங்கி நிற்கிறது.

இந்த நாட்டில், தமிழர்கள், அவர்கள் யாழ்ப்பாணத்திலோ, வன்னியிலோ, திருகோணமலையிலோ, மட்டக்களப்பிலோ, மலையகத்திலோ, கொழும்பிலோ எங்கு வாழ்ந்தாலும் இரண்டாம்தரப் பிரசைகள், அவர்களை எந்த வழியில், எந்த விதத்தில் எந்தத் தகாத காரணம் காட்டிச் சீண்டினாலும், அது எவ்வளவு பெருங்குற்றமாக இருந்தாலும் அது அதிகாரத்தினால் கவனத்தில் எடுத் துக் கொள்ளப்படமாட்டாது. அதுவும் பாதுகாப்பு விடயங்களோடு சம்பந்தப்பட்டதெனில் கேட்பார் எவருமில்லை; தண்டனையும் கிடையாது என்ற நிலைப்பாடு ஆழப் பதிந்துவிட்டது.

யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் மக்களின் மனித உரிமைகள் மட்டுமல்ல; அவர்களுக்குரிய அடிப்படை வாழ்வாதார உரிமை, நடமாடும் உரிமை என்பன மறைமுகமாகவும், நேர்முகமாகவும் தட்டிக்கேட்பார் எவருமின்றித் தீண்டப்படுகின்றனவே!

இந்தநிலை இப்போது மாறும் என்று எதிர்பார்க்க இயலவில்லை. இனவிரோதத்துடனும் அதே மஞ்சள் கண்ணுடனும் தமிழ் மக்களை நோக்கும் அரசாங்கங்கள்- அரசாங்கம் - தொடர்ந்து ஆட்சிபீடத்தில் இருக்கும் வரை மேற்கு மாகாண மக்களின் மனித உரிமை - நடமாடும் உரிமை பேணப்படுவது போன்றநிலை உருவாகும் என்று எதிர்பார்க்கமுடியாது என்பதே யதார்த்தம்!

## வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்ட பெண் தலைமறைவு

யாழ்ப்பாணம் ஒக். 1

வைத்திய நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி கோப்பாய் பகுதியில் மோசடியில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் தலைமறைவாகியுள்ளதாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பெண், தனது சகோதரன் ஒரு வைத்தியர் எனக் கூறியும் அவர் மூலமாக வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறியும் பெருமளவானவர்களிடம் பணத்தைப் பெற்றுள்ளார்.

பணம் வழங்கியவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருமாறு அவரிடம் கோரிவந்தனர் என்றும் இதனால் அவர் தலைமறைவாகியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் கிராம சேவையாளரிடமும் கோப்பாய் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பிட்ட பெண் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அண்மைக்காலமாகவே கோப்பாய், டச்சு வீதியில் வசித்து வந்தார் என்றும் கூறப்பட்டது. (203)

## விஞ்ஞான ஆசிரியர்களுக்கு இருநாள் செயலமர்வு

யாழ்ப்பாணம் ஒக்.1

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட [illegible] யாற்றும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் நடைபெறுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் செயலமர்வில் அழைப்புக் கடிதம் கிடைத்த விஞ்ஞான ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-302)

# முதியவர்கள் ஒவ்வொருவரும் எமது இளம் சந்ததியினர் படிக்கவேண்டிய பாடப்புத்தகங்கள்; பல்கலைக்கழகங்கள்

## முதியோர்தினச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்



முதியவர்கள் ஒவ்வொருவரும் எமது இளம்சந்ததியினர் படிக்கவேண்டிய பாடப்புத்தகங்கள். அவர்களில் பலர் பாடப்புத்தகங்களாக மட்டுமன்றிப் பல்கலைக்கழகங்களாகவும் திகழ்கின்றவர்கள்.

இவ்வாறு சர்வதேச வயோதிபர் தினத்தையொட்டி சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முதியோர்கள் எம் கண்முன்னால் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கும் முன்னோர்கள், இதுவரை வாழ்ந்து முடித்துவிட்ட சாதனையோடும், இன்னமும் வாழ்வோம் என்ற எதிர்கால நம்பிக்கையோடும் இந்த ஆண்டிலும் வருகின்ற வயோதிபர் தினத்தை முதியோர்களான நீங்கள் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

வாழ்வின் அனுபவங்களில் முதிர்ச்சி அடைந்தவர்கள் நீங்கள் என்பதால் வயோதிபர்களை முதியோர்கள் என்று அழைப்பதில் நான் பெருமையடைகின்றேன்.

நீங்கள் பெற்றிருக்கும் முதுமைக்கு மரியாதை செலுத்தும் தினமே வயோதிபர் தினமாகும். முதியோர்களாகிய உங்களுக்குச் செலுத்துகின்ற மரியாதை என்பது நாம் வாழும் தேசத்திற்கும் மானுட சமூகத்திற்கும் செலுத்துகின்ற மரியாதை என்றே நான் கருதுகின்றேன்.

அனுபவங்கள்தான் சிறந்த படிப்பினைகள். இந்தவகையில் நீங்கள் ஒவ்வொருவரும் தேர்ந்த அனுபவங்களாகவே கருதப்படுகின்றீர்கள்.

நீங்கள் நடந்துவந்த பாதையில் கற்களையும் முட்களையும் சந்தித்திருப்பீர்கள். இன்பங்களையும் துன்பங்களையும் பங்குபோட்டு அனுபவித்திருப்பீர்கள். உங்களது இல்லற வாழ்விலும் சரி, பொது வாழ்விலும் சரி பல இலட்சியங்களை நீங்கள் எட்டியிருப்பீர்கள். அந்த இலட்சியங்களை எட்டுவதற்குப் பல்வேறு தடைகளையும் சந்தித்திருப்பீர்கள். அந்த அனுபவங்கள் தான் எமது சமகால இளையோர்களுக்கு அவசியயமானவைகளாகும்.

நீங்கள் பெற்ற அனுபவங்களை எமது இளையோருக்கு நீங்கள் கற்றுக்கொடுப்பீர்கள் என்பது எனது நம்பிக்கை! மனித உயிர்கள் மீதான நேசத்தையும் தேவையற்ற வன்முறைகள் மீதான எதிர்ப்பையும் கற்றுணர்ந்த நீங்கள் எமது சமகால சந்ததியினருக்கு அவற்றைக் கற்றுக்கொடுப்பதே இந்தத் தேசத்துக்கும் மனித சமூகத்திற்கு ஆற்றுகின்ற பணியாகும்.

ஒரு மனிதனின் மரணம் என்பது இயற்கையானதாக இருப்பதையே எந்தவொரு நாகரிக சமூகமும் விரும்புகின்றது. இத்தகைய ஒரு சூழல் எமது வாழ்விடங்களிலும் விரைவாக உருவாக்கப்படல் வேண்டும்.

வயோதிபர்களான நீங்களும் இன்றைய அமைதியற்ற சூழலினால் பல்வேறு அசௌகரியங்களையும் சந்திக்க வேண்டிய துயரங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே மாற்றமொன்று நிகழும் என்பதில் மாற்றமில்லை என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ்வாறானதொரு மாற்றம் என்பது அமைதியின் வருகைக்கான மாற்றமாக இருக்க வேண்டும். உங்களது வழித்தோன்றல்கள், உங்களது அடுத்த சந்ததியினர் எமது வாழ்விடங்கள் தோறும் நிம்மதியாக வாழும் காலத்தை உங்கள் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்பதே எமது விருப்பங்களாகும். அதற்கு ஜனநாயகம் புத்துயிர் பெற்று எழ வேண்டும். ஜனநாயக சுதந்திரத்தை பலப்படுத்த வேண்டும்.

அதற்காக நீங்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும் பங்களிப்பையும் நான் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன். இதுவே வயோதிபர் தினத்தில் நான் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் ஆகும் - என்றுள்ளது.

## வடமராட்சி ம.ம.கல்லூரியின் பரிசளிப்பு விழா

மந்திகை ஒக்.1

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை அதிபர் திருமதி எஸ்.சுகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவிலே யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி கணேஷ் பரிசில்களை வழங்குவார். (203-70-218)

## ப.நோ.கூ.சங்கங்களில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு

குடாநாட்டிலுள்ள ப.நோ. கூ.சங்கங்களில் கோதுமை மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மக்கள் தனியார் வர்த்தக நிலையங்களில் அதிகரித்த விலையில் கோதுமை மாவை பெற்றுக் கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, செயலக அரச களஞ்சியத்திலும் கோதுமை மாவின் கையிருப்புத் தீர்ந்துள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (203-224)

## வல்லை, மண்டான் கடற்பிரதேசங்களில் இம்முறை உப்பு விளைச்சல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

வல்லை மற்றும் மண்டான் கடற்பிர தேசங்களில் இம்முறை உப்பு பெருமளவில் விளைச்சல் காணப்படுகின்றது.

விளைந்த உப்புக்களை அள்ளி எடுத்து செல்வதில் மக்கள் முண்டியடித்து வரு கின்றனர்.

இந்தக் கடற்கரைப் பிரதேசத்தில் அள்ளி எடுக்கப்பட்ட உப்பு கிலோ 5 ரூபா தொடக்கம் 7 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது நிலவும் கடும் வறட்சி, வெப்பம் போன்றவற்றினாலேயே உப்பின் விளைச்சல் இம்முறை அதிகரித்து காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பெருமளவில் மக்களால் அள்ளப்பட்டு வரும் உப்பு மூடைகளாகக் கட்டப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-224)

## றுகுணு கப்பலில் எடுத்துவரப்பட்ட சீனி, அரிசியை பங்கீட்டு அட்டைக்கு வழங்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.1

யாழ்.மாவட்டத்திற்கென றுகுணு கப்பலில் எடுத்துவரப்பட்ட சிவப்பு நாட்டரிசி, சீனி ஆகியவற்றை நியாய விலையில் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு வழங்கவேண்டும் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

குடாநாட்டில் உள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் இவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதற்கான வழங்கற் கட்டளைகள் நேற்று ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்குமாறும் ஒரு கிலோ சிவப்பு நாட்டரிசி 81 ரூபாவும் ஒரு கிலோ சீனி 76 ரூபாவாகவும் பங்கீட்டுக்கு விற்பனை செய்யுமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 16 | 02.10.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.ப. 04.06வரை |
| நட்சத்திரம் : | சுவாதி |
| | பி.ப. 01.45 வரை |
| சுபநேரம் : | 07.32 -07.02 |
| ராகுகாலம் : | 01.32 -03.02 |

## முகாமைத்துவ மாணவர்களுக்கான குழுப்படம் எடுக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.1

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் ஒன்றியத்தினர் நாளை மறுதினம் பி.ப.3 மணிக்கு இறுதி வருட முகாமைத்துவ மாணவர்களுக்கான குழுப்படம் எடுக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளனர்.

நிகழ்வில் சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முகாமைத்துவ மாணவர் ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார்.

## 13 லட்சம் ரூபா செலவில் முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

மந்திகை,ஒக்.1

புலோலி மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலைய முன்பள்ளிக்கு சுமார் 13 லட்சம் ரூபா செலவில் புதிய முன்பள்ளிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இம்முன்பள்ளிக்கான நிதி உதவியை 'போறூட்' நிறுவனத்தினரும் பொதுமக்களும் வழங்கியுள்ளனர்.

இந்த முன்பள்ளிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான காணியை திருமதி எஸ்.ஆழ்வாப்பிள்ளை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

பூர்த்தியடையும் நிலையில் உள்ள இந்த முன்பள்ளிக் கட்டடம் அடுத்த மாத இறுதியில் திறந்துவைக்கப்படுமென கந்தமுருகேசனார் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.சிவராஜசிங்கம் தெரிவித்தார். (203-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் மீது பொலிஸார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## உயர்நீதிமன்றம் காட்டமான கேள்வி

கொழும்பு,ஒக்.1

நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர மீது இன்னமும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொலிஸ் மா அதிபரிடம் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

ஜயசுந்தர பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார் என்று தெரிவித்து அவருக்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண, சி.ஐ.டி. பணிப்பாளர் சிசிர மெண்டிஸ், லஞ்ச ஊழல் திணைக்களப் பணிப்பாளர் நெவில் குருகே ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்தனா, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் கொண்ட ஆயமே இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

அப்போது நீதியரசர்கள், "முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர பதவியில் இருக்கும்போது அரச சொத்துகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் இலாபம் பெற்றுள்ளார். இது ஒரு குற்றச்செயல். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபடலாம், ஏன் இதுவரை அவ்வாறு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை?" - என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினர்.

இந்த விடயத்தில் புலன்விசாரணைகளை நடத்தி மேலும் ஊழல்களை கண்டுபிடிக்கத் தவறிய சி.ஐ.டி. பணிப்பாளரையும் நீதியரசர்கள் காட்டமாக விமர்சித்தனர். ஜயசுந்தர மீதான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

"அரச சொத்துகளை தனிப்பட்ட லாபத்துக்குப் பயன்படுத்திய ஜயசுந்தர இனிமேல் எந்த அரச சேவையிலும் பதவி வகிக்கமுடியாது" என்று உத்தரவிட்டனர். இது தொடர்பாக விசாரிக்க, எதிர்வரும் 8ஆம் திகதி தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் ஜயசுந்தரவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.(சி)


# வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல் - 2008

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு இக்ராட் எம்-8 பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 02.10.2008 - 10.10.2008 பி.ப. 2 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 16.10.2008 பி.ப. 1 மணி
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 16.10.2008 பி.ப. 2 மணி

(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்). கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *செயலாளர், வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்*என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்", பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, (ரெலிக்கொம் அருகில்), யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 16.10.2008ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக் கப்படக்கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக் கப்படமாட்டாது) | பெறுமதி சேர்வரி (வற்) |
|---|---|---|---|---|
| 1 | உரும்பிராய் சந்தை வீதி | 3750.00 | 500.00 | 75.00 |
| 2 | விளையாட்டரங்கு வீதி (கல்வியங்காடு) | 15000.00 | 1000.00 | 150.00 |
| 3 | நீர்வேலி கலட்டி பாடசாலை வீதி | 12000.00 | 1000.00 | 150.00 |
| 4 | கதிரிப்பாய் சுப்பிரமணியம் வீதி | 2000.00 | 300.00 | 45.00 |

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*வலி.கிழக்குப் பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*புத்தூர்.*
*29.09.2008* (சி/554918)


நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றன.

விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதையும் பண்பாட்டு ஊர்வலத்தில் நடைபெற்ற வேடப்புனைவு, பொய்க் கால் குதிரையாட்டம், கரகம் ஆகிய நிகழ்வுகளையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

விழாவில் 'கலைஞானச் சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களையும் கலைநிகழ்வுகளில் ஒரு காட்சியையும் கீழே உள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## விலங்கு விசர்நோய் எதிர்ப்பு - நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை

**நான்காம் நாள்**

**விலங்கு விசர் நோய்க்கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள்**

**மனிதருக்கான தடுப்பு மருந்தேற்றல்**
- முற்கூட்டிய தடுப்பு மருந்தேற்றல்
- நாய்க்கடியின் பின்னான தடுப்பு மருந்தேற்றல்

**வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்தேற்றல்**
- நாய்க்குட்டியின் 6 வார வயதில் முதலாவது தடுப்பூசி
- நாயின் 6 மாத வயதில் இரண்டாவது தடுப்பூசி
- பின்னர் வருடமொரு தடவை தவறாது தடுப்பூசியை போட்டுக்கொள்ளவேண்டும்.

**நாய்களுக்கான இனப்பெருக்கக் கட்டுப்பாடு**
- ஆண் நாய்களுக்கான கருத்தடைச் சத்திரசிகிச்சை
- பெண் நாய்களுக்கான கருத்தடைச் சத்திரசிகிச்சை
- பெண் நாய்களுக்கான 6 மாதத்திற்கொரு தடவை போடப்படும் கர்ப்பத்தடை ஊசி.

இந்தச் சேவைகளை அருகிலுள்ள கால்நடை வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

*(பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்).*


# அரசாங்க அறிவித்தல்

## பழுதடைந்த உணவுப்பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

கோண்டாவில், நாவற்குழி - I, II, III அரச உணவுக் களஞ்சியங்களில் மனிதப் பாவனைக்குப் பயன்படுத்தமுடியாத ஆனால் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தக்கூடிய அரிசி வகை, பயறு, பருப்பு, கோதுமை மா என்பன காணப்படுகின்றன. இப்பொருள்களை தரம் பிரிக்கும் நடவடிக்கை தற்போது களஞ்சியங்களில் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் அதன் அளவு விவரங்களை மாவட்டச் செயலக புனர்வாழ்வுக் கிளையுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இப்பொருள்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன. இப்பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 500.00 உம், மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா 15000.00உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் புனர்வாழ்வுக் கிளையில் பெற்றுத் தபால் உறையின் மேல் மூலையில் ***"பழுதடைந்த பொருள்களுக்கான கூறுவிலை"*** எனக் குறிப்பிட்டு 15.10.2008ஆம் திகதி மு.ப.10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

பொருள்களை பார்வையிட விரும்புபவர்கள் அரச உணவுக் களஞ்சியங்களில் வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.3 மணிவரை அதற்குரிய களஞ்சியங்களில் பார்வையிடலாம்.

கூறுவிலைகள் 15.10.2008ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளித்திருக்கமுடியும்.

பொருள்களை எடுப்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கிக் கிளையில் பணத்தை உடனடியாகச் செலுத்திப் பொருள்களை உடனடியாகக் களஞ்சியத்தில் இருந்து அகற்றவேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**க.கணேஷ்,**
*அரசாங்க அதிபரும்/மாவட்டச் செயலரும், யாழ்.மாவட்டம்.*
(சி/554923)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்பளிப்புகள் பெற்றுத் தருவதாகக் கூறி

# 'கிளினிக்' நோயாளிடம் பணம் வசூலித்த பாடசாலை மாணவி இப்போது விளக்கமறியலில்!

மந்திகை, ஒக்.01

யாழ்.வைத்தியசாலை ''கிளினிக்'' ஒன்றில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவித்து. குறிப்பிட்ட ''கிளினிக்'' நோயாளர்களிடம் பணம் வசூலித்து பதிவுகளை மேற்கொண்ட மாணவி ஒருவர் நெல்லியடிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன் நேற்று ஆஜர்செய்யப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் ''கிளினிக்'' ஒன்றுக்குச் சமுகமளிப்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன என்றும் அதற்கான பதிவை 50 ரூபா செலுத்தி மேற்கொள்ளும் படியும் பிரஸ்தாப மாணவியும் மற்றும் மூவரும் பதிவுகளை மேற்கொண்டனர் என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து விசாரித்த நீதிவான் பிரஸ்தாப மாணவி கல்விபயிலும் பாடசாலை அதிபரையும் யாழ். வைத்தியசாலை கணக்காளரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (அ-1-218)

## மரண அறிவித்தல்கள்

### குஞ்சன் இராசு



குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குஞ்சன் இராசு காலமானார்.

அன்னார் அம்மாஅக்காவின் அன்புக் கணவரும், இராசலிங்கம் (லிங்கம் ரேடேர்ஸ், கொடிகாமம்), இராசமலர் (குடமியன், வரணி), இரத்தினலிங்கம் (சுவிஸ்), ரவீந்திரன் (குடமியன்), லோகேஸ்வரன் (சுவிஸ்), ஞானேஸ்வரன் (சுவிஸ்), பாஸ்கரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஈஸ்வரி, மகாலிங்கம், ரிஷி (சுவிஸ்), சந்திரமதி, இராஜி (சுவிஸ்), சந்திரகலா (சுவிஸ்) கோகிலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.09.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் வேவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.ரவீந்திரன் (சந்திரன் - மகன்)

*பருத்தித்துறை வீதி,*
*கொடிகாமம்.*

### திருமதி மாணிக்கப்பிள்ளையார் தையல்நாயகி



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமாகிய திருமதி மாணிக்கப்பிள்ளையார் தையல்நாயகி (29.09.2008) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், மாணிக்கப்பிள்ளையார் அவர்களின் அன்பு மனைவியும், வரதராணி, இரஞ்சினி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.09.2008) செவ்வாய்க்கிழமை வீரசைவமுறைப்படி நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரஞ்சினி தயாபரன் (மகள்),
ரஜீந்தன் (பேரன்), பூரண்யா (பேர்த்தி)

*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

### திருமதி பூபாலதேவி விவேகானந்தன்

பெரியார் பகுதி, அல்வாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபாலதேவி விவேகானந்தன் நேற்று (30.09.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் விவேகானந்தனின் பாசமிகு மனைவியும், சிவபாலன் (கனடா), ஜெயபாலன்,குணபாலன், உமாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், ஞானபாஸ்கரனின் (கனடா) சகோதரியும், ஓய்வு பெற்ற ஆசிரியர் சோமசுந்தரம் - பார்வதி தம்பதியினரின் மருமகளும், பாலநந்தினி (கனடா)யின் மாமியும், டர்சினியின் (கனடா) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2008) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.விவேகானந்தன் (கணவன்).

*பெரியார் பகுதி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

### நாகமுத்து குணநாயகம் (மணியம் - ஆசிரியர்)



யாழ்/கந்தர்மடம், ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் அண்மைக்காலமாக தென்னிந்தியாவின் மதுரை நகரைத் தற்காலிக வாழ்விடமாகவும் கொண்ட நாகமுத்து குணநாயகம் நேற்று (30.09.2008) செவ்வாய்க்கிழமை மதுரையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - இராசமுத்து தம்பதியினரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ஞானம்மா தம்பதியினரின் அருமைமருமகனும், றெஜினாவின் பாசமிகு கணவரும், மகிழ்ச்சிகரன் (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி), மதிஅமிர்தன் (சுவிஸ்), மகிழ்வதனன் (சுவிஸ்), திருமதி பவ்ானி கந்தசாமி (சுவிஸ்), மதிவண்ணன் (மதுன்ர), வோல்ரன் (மதுரை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி மகேஸ்வரி செல்லத்துன்ரயின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் மதுரை கூடல் நகரில் இன்று (01.10.2008) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.மகிழ்ச்சிகரன் (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி).

*138, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம் மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

## பொழுது இருண்ட பின்னர் கூடி நின்ற இளைஞர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

கரவெட்டி, ஒக்.1

வடமராட்சியில் வல்வெட்டி, நெல்லியடிப் பகுதிகளில் இருள் கவிழ்ந்த பின்னர் - 6.30 மணிக்குப் பின்னர் - கூட்டம் கூட்டமாக நின்ற இளைஞர்கள் படையின ரால் பிடிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிமன்றம் கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கையின் ஓர் அங்கமாக படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாலை 6.30 மணிக்குப் பின்னர் வீதிகளில் நடமாடக்கூடாது என்று எச்சரித்து அவர்களை விடுவித்தனர். (அ-1-70)

## பாதிக்கப்பட்டோர் தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஒக்.1

புலமைப்பரிசில் பரீட்சை புள்ளியிடல் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களில் கடந்த 27 ஆம்திகதி சமூகசேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு சமர்ப்பித்த மனுவில் கையொப்பமிடாதவர்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் மாவட்ட அமைப்பாளர் சி.அ.உதயடன் தொடர்பு கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பெற்றோரின் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர். (50)

## ஆசிரியர்தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.1

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தின விழா எதிர்வரும் ஐந்தாம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவுக்கு முதன்மைவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக பௌதிகபீட பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொள்வார். (1-207)

## மருந்தகத்துக்குள் புகுந்து பெண் வைத்தியரை சுட்டுக்கொன்றார் சிப்பாய்!

அம்பாந்தோட்டை,செப்.29

அம்பாந்தோட்டை, பண்டாரிகிரியப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இராணுவச் சிப்பாய் ஒருவரால் பெண் வைத்தியர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

டபிள்யூ. டி.லக்ஷ்மி இடுனில் (வயது - 38) என்ற வைத்தியரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர். அவருடைய மருந்தகத்திற்குள் புகுந்த இராணுவச் சிப்பாய் அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்று கூறப்படுகிறது.

குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் உடவல இராணுவத் தளத்தில் கடமையாற்றுபவர்.

இச்சம்பவம் தொடர்பாக அம்பாந்தோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை, வைத்தியர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### பரமலிங்கம் ஜெயக்குமார் (B.Com (cey) M.A.(IND))



[மாவட்ட சமூக சேவை அதிகாரி, வவுனியா, தலைவர், சமூக சேவை உத்தியோகத்தர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாணம்]

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் ஜெயக்குமார் (D.S.S.O, வவுனியா) 26.09.2008 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் பரமலிங்கம் (நயினாதீவு-முன்னாள் உபதலைவர், நல்லூர் கிராமசபை), காலஞ்சென்ற இராசரத்தினம் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) தம்பதியினரின் அன்புப் புதல்வனும், கொக்குவிலைச்சேர்ந்த அமரர் துரைராசா மற்றும் அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், Dr.ரமணியின் (வவுனியா மாவட்ட வைத்தியசாலை) அன்பு கணவரும், நிவேதிகா (மாணவி, ரம்பைக்குளம் மகா வித்தியாலயம்), நிதர்சனன், நிதுரன் (மாணவர்கள், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா) ஆகியோரின் தந்தையும், புஸ்பவதி (லண்டன்)யின் பெறாமகனும், திருமலர் (இந்தியா), கலைமகள், வசந்தகுமார் (கிராமஉத்தியோகத்தர், கோண்டாவில், தலைவர் - கிராம உத்தியோகத்தர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாணம்), ஜெயந்திமாலா, கதிர் (பிரான்ஸ்), அமரர் சிறிதரன், வன்னியசேகரன், Dr.சத்தியகுமார் (கொழும்பு), கலையரசி, உதயகுமார் (A.C.C.D Office, Jaffna) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலா (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ஞானமலர், கமலாதேவி (பிரான்ஸ்), நித்திய தர்மகுமார் (லண் டன்), பிறேமகுமார் (பிரான்ஸ்), மதியழகி (பிரான்ஸ்), கிருஸ்ணபவானி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், மோகன் (பொறியியலாளர், கனடா), இராகுலன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2008) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.வசந்தகுமார் (கிராமசேவை உத்தியோகத்தர், கோண்டாவில் வடக்கு J/119-சகோதரன்), க.சிவலிங்கம் (முன்னாள் கிளை முகாமையாளர் - நல்லூர் ப.நோ.கூ.ச.-மைத்துனர்), புகையிரதவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

*கொறவுப்பொத்தான வீதி,*
*வெளிக்குளம்,*
*வவுனியா.*

### தம்பையா சண்முகநாதன் (S.T.S.)



[சண்முகா ஏஜென்சி உரிமையாளர்]

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரோலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகநாதன் நேற்று (30.09.2008) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா- ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், விவேகானந்தன் (பிரான்ஸ்), சத்தியலட்சுமி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் நித்தியானந்தன் (கனடா), நித்தியலட்சுமி (ஆஸ்திரேலியா), சதானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், இரத்தினநாயகம் மற்றும் அழகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விவேகானந்தன் (மகன்)

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை*

### திருமதி பறுவதம் சுப்பிரமணியம் (சிறுப்பிட்டி ஆச்சி)

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கிழக்கு வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பறுவதம் சுப்பிரமணியம் (சிறுப்பிட்டி ஆச்சி) நேற்று (30.09.2008) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சாமியம்மா, வள்ளியம்மை, காலஞ்சென்ற பொன்னாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புத் தாயும், காலஞ்சென்ற குமாரசிங்கத்தின் (நடுவில் அண்ணை) அன்பு மாமியும், காலஞ்சென்ற ஜெயகரன், சிறீகரன் (யா/குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயம்), சிவகரன் (லண்டன்), மனோகரன் (யாழ். மாநகரசபை, தாபனப்பகுதி), கவிதா (ஜேர்மன்), லலிதா (யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம்), விஜிதா மற்றும் ஜீவகலா, குகதர்சினி (லண்டன்), பகீரதன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிலானி, அபிரேகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2008) புதன்கிழமை ந.ப. 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*கிழக்குவளவு,*
*மல்லாகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பக
மாநகர சபை, யாழ்ப்பாணம்,



# தமிழக சட்ட சபையில் தமிழீழத்தை ஆதரித்து 18 நாள்களுக்குள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

## இல்லையேல் 1,000 தீப்பந்தங்கள் ஏந்தித் தமிழீழத்திற்கு வெளிச்சம் காட்டுவோம்



சென்னை, ஒக்.1

தமிழக அரசு இன்னும் பதினெட்டு நாள்களுக்குள் தமிழீழத்தை ஆதரித்து சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண் டும். அவ்வாறு செய்யாவிடில் தீவுத்திடலில் 1000 தமிழர்கள் தீப்பந்தம் ஏந்தி தமிழீழத்துக்கு வெளிச்சம் காட்டுவோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ்.

இலங்கைத் தமிழர்களை சுட்டுக்கொல்லும் சிங்கள அரசைக் கண்டித்தும் இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிக்க மத்திய - மாநில அரசுகளை வலியுறுத்தியும் பா.ம்.க. சார்பில் தொடர் முழக்கப் போராட்டம் சென்னை ஆழ்வார் பேட்டை இலங்கைத் தூதரகம் முன்பு நேற்று நடந்தது.

போராட்டத்துக்கு பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தலைமை வகித்தார். அங்கு அவர் பேசியவை வருமாறு:-

ஈழத் தமிழர்களைக் கூண்டோடு ஒழித்து விடவேண்டும் என்று செயற்பட்டுவரும் சிங்கள இராணுவத்தையும், ராஜபக்ஷவையும் கண்டித்து இந்தப் போராட்டம் நடக்கிறது.

ஈழத்தமிழர்களுக்கான போராட்டத்தில் தமிழகத்தில் உள்ள தமிழர்கள் உரக்கக் குரல் கொடுக்கவில்லை என்ற ஆதங்கம் உலக அளவில் உள்ள தமிழர்களிடம் உள்ளது.

சட்ட மன்றுக்குள் உண்ணாவிரதம் இருப்போம்

இலங்கை இனப்படுகொலை போல உலகில் வேறு எங்கும் படுகொலை நடந்தது இல்லை என்று மனித உரிமை அமைப்புகளும் மனித உரிமை ஆர்வலர்களும் கூறிவருகின்றனர்.

தமிழக அரசும் முதலமைச்சரும் இதில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழக அரசு இன்னும் 18 நாள்களுக்குள் தமிழ் ஈழத்தை ஆதரித்து சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இல்லை என்றால் தீவுத்திடலில் 1000 தமிழர்கள் தீப்பந்தம் ஏந்தி தமிழ் ஈழத்துக்கு வெளிச்சம் காட்டுவோம்.

அதன் பிறகும் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றால் எங்கள் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்துக்குள் நுழைந்து ஒரு பகுதியை ஆக்கிரமித்து தொடர் உண்ணாவிரதம் இருப்பார்கள்.

அடுத்து எங்கள் எம்.பிக்கள் வருவார்கள். இளைஞர் படை வரும், மகளிர் வருவார்கள், மாணவர்கள் வருவார்கள்.

நாங்கள் அமைதியான முறையில் போராட வேண்டும் என்று நினைக்கிறோம். எனவே விரைவாக முடிவு எடுத்து ஈழத்தில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும்.

- இவ்வாறு அவர் பேசினார்.

நேற்றைய முழக்கப் போராட்டத்தில் பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, எம்.பிக்கள் ஏ.கே.மூர்த்தி, பொன்னுசாமி, திண்டிவனம் தன்ராஜ், வேல்முருகன் எம்.எல்.ஏ., டைரக்டர் சீமான், அம்பத்தூர் நகர மன்றத் தலைவர் ஜெயராமன், சைதை சிவா, புதுவை எம்.எல்.ஏக்கள் அனந்தராமன், பன்னீர்செல்வம், வேல்முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (சி)

## சாமுண்டா தேவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் திடீரென வெடிகுண்டுப் புரளி பரவியது. இதனால் பீதியடைந்த பக்தர்கள் அங்கிருந்து கீழே வருவதற்காக வாசல் பகுதிக்கு ஓடிவந்தனர். சிறிய ஒடுக்கமான மலைப்பாதையில் ஒரேநேரத்தில் அனைவரும் வெளியேற முற்பட்டதால் அங்கு பெரும் நெரிசல் ஏற்பட்டது. பலர் மூச்சுத்திணறி மயங்கி வீழ்ந்தனர்.

அந்த நேரத்தில் ஆலயத்தின் பிரமாண்டமான கதவும் சரிந்து விழுந்தது.

குண்டுதான் வெடித்துவிட்டதோ என நினைத்து அனைவரும் ஒருவர் மீது ஒருவர் மிதித்துகொண்டு வெளியே ஓடிவர முயன்றனர். அந்த நெரிசலில் சிக்கி ஏராளமானோர் உயிரிழந்தனர். பல்ருக்குக் காயம் ஏற்பட்டது.

இந்தக் குழப்பத்தில் உயிரிழந்தோரில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள். இதில் காயமடைந்த மேலும் ஐம்பதுக்கு மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நவராத்திரி விழாவைக் கொண்டாடுவதற்கு பல்லாயிரக்கணக்கில் மக்கள் ஒன்று கூடிய வேளையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டமை அங்கு பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாப்பின் அருகிலுள்ள பகுதிகளில் இருந்து வந்திருந்தனர் என்று நம்பப்படுகிறது. மீட்புப் பணிகளுக்காக இராணுவத்தினர் அங்கு அனுப்பட்டனர். சம்பவத்தைக் கேள்வியுற்ற ராஜஸ்தான் முதல்வர் வசந்த ராஜே ஜோத்பூருக்கு விரைந்துள்ளார். (அ-ஒ)

## இராணுவச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்த இராணுவ அரண்மீது எமது அணியினர் வெற்றிகரமாக அதிரடித்தாக்குதலை நடத்தினர். அத்தாக்குதலில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரும் இராணுவத்தினருமாக நால்வர் உயிரிழந்தனர். இதன்போது ரி- 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் சொட்கண் ஒன்றையும் சுமார் 50 ரவைகளையும் மீட்டுக்கொண்டு எமது அணியினர் தளம் திரும்பினர்-என்று புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

எனினும்இத்தாக்குதல் தொடர்பாகப் படைத்தரப்பில் இருந்து செய்தி எழுதப்பட்டவரை எவ்வித தகவலும் இதுவரை வெளிவரவில்லை. (அ-சி)

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர்
தெரிவுப் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: இன்று (01.10.2008) புதன் 11 மணி தொடக்கம் 3 மணி வரை
வியாழன் / வெள்ளி } 9 மணி தொடக்கம் 2 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)

### தேசிய மட்டப் போட்டிகள்

# கோலூன்றிப் பாய்தலில் யாழ்.மாணவி தனுசா தங்கப் பதக்கம் சுவீகரித்து சாதனை படைத்தார்

## யாழ்.மாவட்டத்துக்கு இதுவரை 7 பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஒக்.1

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் 17 வயப்பிரிவில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி சண்முகராசா தனுசா முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் சுவீகரித்துச் சாதனை புரிந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இத் தடகளப் போட்டிகளில் நேற்றுவரை ஏழு பதக்கங்களை யாழ். மாவட்ட மாணவர்கள் சுவீகரித்துள்ளனர்.

நேற்று நடந்த கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 17 வயதுப் பிரிவில் முதலிடம் பெற்று யாழ். மாவட்டத்துக்கு முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார் சண்முகராசா தனுசா.

மாவட்ட, மாகாணப் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய இவர் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

அதே கல்லூரியைச் சேர்ந்த கோபாலன் கணாதீபன் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 21 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றிருந்தார்.

இதுவரை பதக்கம் பெற்றோர் விவரம் வருமாறு:-

* ரி.தர்சன் - 21 வயதுப் பிரிவு - 110 மீற்றர் தடைதாண்டல் - 2ஆம் இடம் - சென்.ஜோன்ஸ்
* எம்.பார்த்தீபன் - 21 வயதுப் பிரிவு - தட்டெறிதல் - 2ஆம் இடம் - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.
* கே.சிறிதர்சன் - கோலூன்றிப் பாய்தல் - 17 வயதுப் பிரிவு - 3ஆம் இடம் - தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்.
* எஸ்.வாகீசன் - குண்டெறிதல் - 21 வயதுப் பிரிவு - 3ஆம் இடம் - யாழ். இந்துக் கல்லூரி.
* கே. கோபிநாத் - 21 வயதுப் பிரிவு - குண்டெறிதல் - 2ஆம் இடம் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன். (அ-1-86)

## பூநகரிக் கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் இரு படகுகள் மீது தமது அதிவேகப் படகுகள் திடீர்த் தாக்குதல்களை நடத்தி அவற்றை அழித்தன என்றும் - இத்தாக்குதல் படகுகளில் இருந்த 8 கடற்புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் - படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. அதேவேளை, இத்தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எவ்வித தகவல்களும் இச் செய்தி எழுதும் வரை வெளியாகவில்லை. (அ-சி)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
Dip In Computerized Accounting
Diploma In English(Grammer & Spoken)
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டணச் சலுகை
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
MCS
www.mcs...academy.com UNDP/JRRP

## மணலாற்றில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் முன்நகர்வு நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின்போது 6 படையினர் கொல்லப்பட்டனர். 20 பேர் வரை காயமடைந்தனர். படையினரின் டாங்கி எதிர்ப்பு ஆயுதம் லோ ஒன்று உட்பட மேலும் பல பொருள்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. தமது தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத படையினர் இழப்புக்களுடன் மீண்டும் பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர் - என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (அ-1)

## விடுதலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான ஓடுபாதை அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த விமான ஓடுபாதை சுமார் 500 மீற்றர் நீளமானதாகும்.

படைநடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் 57ஆவது படைப்பிரிவு நேற்றுப் பிற்பகல் புலிகளின் இந்த விமான ஓடுபாதையைக் கைப்பற்றியிருக்கின்றது - என்றார்.

இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கள முனைகளில் நேற்று முன்தினம் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டைகளில் 50 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் -

தமது தரப்பில் ஓர் அதிகாரி உட்பட பத்துப் படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் 32 படையினர் காயமடைந்திருக்கின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் ரயில் நிலையப்பகுதியை கைப்பற்றிய படையினர் முறிகண்டிப் பகுதியில் ஏ - 9 வீதியை எட்டிப்பிடிக்கும் தொலைவில் நிற்கின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்திருக்கிறது. (சி)

ஈசன்
கல்வி நிலையம்
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்
தொழிற்படும் விலங்கு
பொன் திவாகரன்
ஆரம்பம்:-03/10/2008
நேரம்:-5.00 p.m.

## பொதுக் கூட்டம் நடத்துவார் கருணாநிதி

பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் ராமதாஸ் விடுத்துள்ள கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்று மாலை கருத்து வெளியிட்டார்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்குவதற்கும் மத்திய அரசின் தலையீட்டை கோரியும் எதிர்வரும் 6 ஆம் திகதி பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகக் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதே வேளை நாளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடத்தப்படவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் விஜயகாந்தின் தேசிய முற்போக்குத் திராவிட கழகமும் கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## குடிதண்ணீர் திட்டங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு

கொழும்பு, ஒக்.1

மாத்தளை மாவட்டத்தில் உள்ள குடிதண்ணீர் திட்டங்களுக்கு உடன் கூடுதல் பாதுகாப்பு வழங்குவதென பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

அந்தப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகிக்கும் குழாய்களில் நஞ்சு கலந்து இருப்பதாக பரவிய வதந்தியை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

## களுவாஞ்சிக்குடியில் 2 சடலங்கள் மீட்பு!

மட்டக்களப்பு, ஒக்.1

களுவாஞ்சிக்குடி, கோடை மேட்டுக் குளம்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இருவரின் சடலங்கள் அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. சடலமாக மீட்கப்பட்டவர்கள் படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்த வந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வன்னேரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதனை முறியடிக்கும் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர்.

இதேவேளை, கொக்காவில் ரயில் நிலையத்துக்கு வடக்காக படையினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராகவும் விடுதலைப் புலிகள் நேற்றுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

## புனித நோன்புப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மௌலவி தலைமையில் இடம்பெற்றது.

இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பை பிறைக்குழுவின் தலைவர் அல்ஹாஜ் றியால் மௌலவி நேற்றிரவு 7.30 மணிக்கு விடுத்தார்.

இதனையடுத்து இன்று ரம்ழான் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகிறது. (அ-சி)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசியப் பொருள்கள் அங்கு அனுப்பிவைக்கப்படும்.

அனுப்பப்படும் பொருள்கள் அனைத்தும் அரச அதிபர்களின் ஊடாகத் தங்கு தடையின்றி விநியோகிக்கப்படும். அதற்கான முழு அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரச அதிபர்கள் பரிந்துரைத்துள்ள பொருள்களின் விலைகள் அனைத்தும் அனுப்பப்படவுள்ள பொருள்களுக்குள் அடங்குகின்றன.

இந்தப் பொருள்களுடன் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதிநிதிகளும் வன்னிக்குச் செல்வர். வழமையான முறையிலேயே இந்தப் பொருள்கள் விநியோகிக்கப்படும் - என்றார்.

இச்சந்திப்பில் பசில் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், உலக உணவு நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண் டனர்.

பிந்திய தகவல்களின் பிரகாரம்-

ஓமந்தைச் சோதனை நிலையம் ஊடாக நாளை வன்னிசெல்லும் 60 லொறிகளில் 30 லொறிகள் உலகஉணவுத் திட்டத்தின் ஏற்பாட்டில் செல்கின்றன. ஏனைய 30 லொறிகளும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்களுக்கான உணவுப் பொருள்களை எடுத்துச் செல்கின்றன. (அ-சி-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.